விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26

ஒலி 228 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 19 திங்கட்கிழமை (04.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் தீர்மானம்



என்ன செய்யப்போகிறது அநுர அரசு

03ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள் நீக்கம்



எதிர்க்கட்சி பூரண ஆதரவு

10ஆம் பக்கம் பார்க்க

## தேசபந்துவை பதவி நீக்க ஏகமனதாக தீர்மானம்



03ஆம் பக்கம் பார்க்க

## செம்மணியில் இன்று ஸ்கான் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தால் தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இன அழிப்புக்குச் சான்றாக மாறியுள்ள செம்மணி மனிதப் புதைகுழி வழக்கில் இன்று ஸ்கானர் பரிசோதனை இடம்பெறவுள்ளது.

கிருஷாந்தி படுகொலை வழக்குடன் செம்மணிப் புதைகுழி அகழ்வும் நிறுத்தப்பட்டிருந்த நிலையில், அண்மையில்

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணியில் நேற்றும் நான்கு எலும்புக்கூட்டுத் தொகுதிகள்

### இதுவரை 130 மனித என்புத் தொகுதிகள் அடையாளம்

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழிகளில் இருந்து நேற்றும் புதிதாக நான்கு மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அத்துடன் ஏற்கெனவே அடையாளம் காணப்பட்ட எலும்புத் தொகுதிகளில் மூன்று தொகுதிகள் முழுமையாக அகழ்ந்

15ஆம் பக்கம் பார்க்க

### - யாழ். செம்மணியால் சென்றவர்களில் -

# தலையாட்டிகள் இனங்காட்டிய 300 பேர் கொல்லப்பட்டனர்



### அவர்களே செம்மணியில் புதைப்பு
### சோமரட்ண கூறியதாக அவரது மனைவி ஜனாதிபதிக்குக் கடிதம்

(கொழும்பு)

செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்று முன்னெடுக்கப்படும் பட்சத்தில், அதில் சாட்சியமளிப்பதற்குத் தயாராக இருப்பதாக கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ தெரிவித்திருப்பதாகக் குறிப்பிட்டு அவரது மனைவி எஸ்.சி.விஜேவிக்ரம ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

### வெளிநாட்டவர்களுக்கு
## கட்டுநாயக்க விமான நிலையத்தில் சாரதி அனுமதிப்பத்திரம்

(கொழும்பு)

நாட்டிற்கு வருகை தரும் வெளிநாட்டினருக்குத் தேவையான சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான கருமபீடம் ஒன்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்

15ஆம் பக்கம் பார்க்க

## பஞ்சலோக சிலை கடத்தல்
### தமிழக பொலிஸாரால் முறியடிப்பு



(சென்னை)

தமிழகத்திலிருந்து இலங்கைக்கு கடத்தப்படவிருந்த ஐம்பொன் சிலையொன்று தமிழகப் பொலிஸாரின் துரித நடவடிக்கையால் முறியடிக்

15ஆம் பக்கம் பார்க்க

## போதைவஸ்துப் பாவனை யாழில் தம்பதி கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், புறநகர்ப் பகுதியில் நீண்டகாலமாக ஹெரோயின் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்ட தம்பதியினர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது அவர்

15ஆம் பக்கம் பார்க்க

### ஓய்வூதியத்தை தரச் சொல்லுங்கள்
## முன்னாள் எம்.பிக்கள் ஜெனிவாவிடம் மன்றாட்டம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட சிறப்பு சலுகைகளை இரத்துச் செய்வதற்கும் எம்.பிக்களின் ஓய்வூதியத்தை இரத்துச்

16ஆம் பக்கம் பார்க்க

## PIN இலக்கம் காலம் நீடிப்பு

(கொழும்பு)

2024/2025 மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரி வருமானங்களைச் சமர்ப்பிப்பதற்காக ஏற்கெனவே வழங்

15ஆம் பக்கம் பார்க்க

### சொத்து விபரம் சமர்ப்பிக்காத
## அரச ஊழியர்களுக்கெதிராக கடும் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் குறித்த விபரங்களை இதுவரையில் சமர்ப்பிக்காத அரச அதிகாரிகள் அவற்றை

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலையாட்டிகள்...

யாழ்.செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்று முன்னெடுக்கப்படும் பட்சத்தில், அதில் சாட்சியமளிப்பதற்குத் தயாராக இருப்பதாக கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ தெரிவித்திருப்பதாகக் குறிப்பிட்டு அவரது மனைவி எஸ்.சி.விஜேவிக்ரம ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அத்தோடு 7 ஆம் காலணி இராணுவப்படை தலைமையகத்தில் கொலை செய்யப்பட்டு செம்மணி சோதனைச் சாவடிக்குக் கொண்டுவரப்பட்ட கிருஷாந்தி குமாரசுவாமி மற்றும் அவரது குடும்பத்தாரின் சடலங்களை கட்டன் லலில் ஹேவாகேயின் ஆணைக்கு அமைய புதைத்ததைத் தவிர வேறெந்தக் குற்றத்தையும் தனது கணவர் புரியவில்லை எனவும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று கடந்தகால அரசாங்கங்கள் இராணுவ உயரதிகாரிகளைப் பாதுகாத்துக்கொண்டு கீழ்மட்ட வீரர்களைத் தண்டிப்பதன் ஊடாக குற்றமிழைத்த இராணுவத்தினரைத் தாம் தண்டித்திருப்பதாக சர்வதேச சமூகத்துக்குக் கூறிவந்ததாகவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் மேல் நீதிமன்றத்தினால் பிரதான குற்றவாளியாகப் பெயரிடப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, அப்படுகொலை குறித்தும் செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் குறித்தும் தன்னிடம் கூறிய விடயங்களை உள்ளடக்கியும் இவ்விவகாரம் தொடர்பில் மீண்டும் சுயாதீன விசாரணையைக் கோரியும் அவரது மனைவியான எஸ்.சி.விஜேவிக்ரம ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார ஆகியோருக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார். அதுமாத்திரமன்றி இவ்விடயம் தொடர்பில் இவ்வாரம் அவர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கும் கடிதமொன்றை அனுப்பிவைக்கவுள்ளார்.

அதன்படி ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

எனது கணவர் சோமரத்ன ராஜபக்ஷ சட்டவிரோதமான முறையில் தண்டிக்கப்பட்டிருக்கிறார். எனவே செம்மணி விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்றை முன்னெடுக்குமாறும் அதில் சாட்சியமளிப்பதற்குத் தான் தயாராக இருப்பதாகவும் எனது கணவர் தெரிவித்துள்ளார்.

1990 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தில் இணைந்துகொண்ட எனது கணவர் 1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் 7 ஆவது காலணி இராணுவப்படையணியின்கீழ் செம்மணிப் பிரதேசத்தில் பணியில் ஈடுபட்டுவந்தபோது இடம்பெற்ற மனிதப்படுகொலையுடன் தொடர்புடையவகையில் கைதுசெய்யப்பட்டார்.

அதனைத்தொடர்ந்து மூவரடங்கிய நீதியரசர் குழாமின் முன்னிலையில் நடைபெற்ற விசேட வழக்கு விசாரணைகளின் பின்னர் 1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை 29 வருடங்களாக அவர் சிறையில் இருந்து வருகிறார்.

இருப்பினும் இவ்விவகாரத்தைப் பொறுத்தமட்டில் கிருஷாந்தி குமாரசுவாமி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை மற்றும் அவரது குடும்பத்தினர் படுகொலை செய்யப்பட்டமைக்கும் எனது கணவருக்கும் எவ்வித தொடர்புமில்லை. மாறாக 7 ஆவது காலணிப்படை தலைமையகத்தின் புலனாய்வு அதிகாரியான கப்டன் லலித் ஹேவாகே தலைமையிலான புலனாய்வு அதிகாரிகளால் செம்மணி சோதனைச்சாவடியில் கைதுசெய்யப்படும் விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் 7 ஆவது படையணி தலைமையகத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு, அங்கு சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டு மரணித்தவர்களின் உடல்கள் மீண்டும் செம்மணி சோதனைச்சாவடி அமைந்துள்ள இடத்துக்குக் கொண்டுவரப்படும்.

அங்கு பணியாற்றிய எனது கணவர் உள்ளடங்கலாக இவ்வழக்கில் தண்டனை பெற்ற ஐவரிடமும் அந்த உடல்களைப் புதைக்குமாறு மேலே பெயரிட்ட கப்டன் லலித் ஹேவாகேயினால் ஆணையிடப்படும். அதன்பிரகாரம் எனது கணவர் உள்ளடங்கலாக ஐவரால் செம்மணி சோதனைச்சாவடிக்கு அண்மையிலுள்ள பகுதியில் அந்த உடல்கள் புதைக்கப்படும்.

வீதியில் செல்லும் வாகனங்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதே 1996ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் செம்மணி சோதனைச் சாவடியில் பணியில் ஈடுபட்டுவந்த எனது கணவர் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ உள்ளடங்கலாக ஏனைய ஐவரினதும் வேலையாக இருந்தது.

செம்மணி சோதனைச்சாவடியானது அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்துக்குள் உள்நுழையும் பிரதான சோதனைச் சாவடியாக இருந்தது. அச்சோதனைச் சாவடியில் பணியாற்றிய எனது கணவர் உள்ளடங்கலாக ஏனைய ஐந்து இராணுவத்தினருக்கு மேலதிகமாக கப்டன் லலித் ஹேவாகேயின் ஆலோசனைக்கு அமைவாக காலை 9.00 மணி முதல் மாலை 4.00 - 6.00 மணி வரை மொழிபெயர்ப்பாளர்கள் என்ற ரீதியில் நாளாந்தம் இந்தச் சோதனைச்சாவடிக்கு வருகைதரும் லெப்டினன் துடுகல, லெப்டினன் உதயகுமார, மொழிபெயர்ப்பாளரான பொலிஸ் பரிசோதகர் சமரசிங்க, பொலிஸ் பரிசோதகர் நஸார் ஆகியோரால் அங்கு அழைத்து வரப்படும் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினரால் அடையாளம் காண்பிக்கப்படும் வீதியில் செல்லும் சந்தேகநபர்கள் செம்மணி சோதனைச்சாவடியில் கைதுசெய்யப்படுவர்.

அவர்கள் மாலை 4.00 மணியின் பின்னர் ட்ரக் வாகனத்தில் ஏற்றப்பட்டு 7 ஆவது காலணி இராணுவப்படை தலைமையகத்துக்குக் கொண்டுசெல்லப்படுவர். அங்கு மரணிப்போர் இரவு வேளையில் மீண்டும் செம்மணி சோதனைச்சாவடிக்குக் கொண்டுவரப்படுவர். அவர்களைப் புதைக்குமாறு எனது கணவர் உள்ளிட்ட தரப்பினருக்கு உத்தரவிட்டுவிட்டு, வந்தவர்கள் மீண்டும் திரும்பிச்செல்வார்கள் என்றே எனது கணவர் கூறியிருக்கிறார்.

செம்மணி சோதனைச்சாவடியில் இவ்வாறான நடவடிக்கைகள் சுமார் ஒரு வருடகாலமாக இடம்பெற்றிருக்கின்றன. எனது கணவர் உள்ளடங்கலாக தற்போது மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இந்த ஐவரும் செய்தது உயரதிகாரிகளால் கொண்டுவந்து தரப்படும் உடல்களைப் புதைத்தமை மாத்திரமேயாகும். எனது கணவருக்கு மரணதண்டனை விதிக்கப்படுவதற்கான ஒரே சாட்சியாக இருந்தது அவர் மனிதப்புதைகுழிகளை அடையாளம் காண்பித்தமை மாத்திரமேயாகும். எனது கணவருடன் தண்டனை விதிக்கப்பட்ட ஏனைய ஐவரும் உயரதிகாரிகள் கொண்டுவந்து தருகின்ற சடலங்களைத் தாம் புதைத்ததாக நீதிமன்றத்தில் கூறியிருக்கிறார்கள்.

கிருஷாந்தி குமாரசுவாமி உள்ளடங்கலாக அவரது குடும்பத்தினர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் மாத்திரம் வெளி வந்தமைக்கான காரணம் என்ன? செம்மணி சோதனைச்சாவடியில் இதுவரையில் சுமார் 300 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளனர். அவ்வாறிருக்கையில் கிருஷாந்தி குமாரசுவாமி குடும்பத்தின் படுகொலை மாத்திரம் வெளியே வந்தமைக்கு இதுவே காரணமாகும்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவின் சகோதரியான சுனேத்ரா பண்டாரநாயக்கவின் கணவர் சர்வதேச மனித உரிமைகள் செயற்பாட்டாளரான குமார் ரூபசிங்க ஆவார். குமார் ரூபசிங்க கிருஷாந்தி குமாரசுவாமி குடும்பத்தின் உறவினர் என்பதனால், அவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவிடம் முன்வைத்த வேண்டுகோளுக்கு இணங்க கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை விவகாரம் தொடர்பில் மாத்திரம் கவனம்செலுத்தப்பட்டு, செம்மணி சோதனைச்சாவடியில் பணியாற்றிய எனது கணவர் உள்ளிட்ட இராணுவத்தினர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

கிருஷாந்தி குமாரசுவாமி உள்ளடங்கலாக அவரது குடும்பத்தினரும் மேலே குறிப்பிட்ட முறைமையில் கப்டன் லலித் ஹேவாகே குழுவினராலேயே கைது செய்யப்பட்டனர். செம்மணி சோதனைச்சாவடியில் இறுதியாகக் கைதுசெய்யப்பட்ட கிருஷாந்தி குமாரசுவாமி உள்ளிட்ட அவரது குடும்பத்தினர், கைதான அன்றைய தினம் மாலை 4.00 மணியின் பின்னர் 7 ஆம் காலணி இராணுவப்படை தலைமையகத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு அங்கு இரண்டு தினங்களில் பின்னர் அவர்கள் கொல்லப்பட்டு அவர்களது உடல்கள் மீண்டும் செம்மணி சோதனைச்சாவடிக்குக் கொண்டுவரப்பட்டன. அங்கு எனது கணவர் உள்ளடங்கலாக ஏனைய இராணுவத்தினரிடம் அவர்களது உடல்கள் ஒப்படைக்கப்பட்டதுடன் அவற்றைப் புதைக்குமாறு உத்தரவிட்ட கப்டன் லலித் ஹேவாகே அங்கிருந்து வெளியேறினார்.

தண்டனை விதிக்கப்பட்டதன் பின்னர் எனது கணவரால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களுக்கு அமைவாக 1999 ஆம் ஆண்டு கப்டன் லலில் ஹேவாகே, கப்டன் பெரேரா, லெப்டினன் உதயகுமார, மொழிபெயர்ப்பாளர்களான பொலிஸ் பரிசோதகர் சமரசிங்க, பொலிஸ் பரிசோதகர் அப்துல் ஹமீட் நஸார், லெப்டினன் துடுகல ஆகிய அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். 6 மாதங்களில் அவர்கள் பிணையில் விடுதலையானதன் பின்னர் அந்த வழக்குக்கு என்ன நடந்தது என யாருக்கும் தெரியவில்லை.

இச்சம்பவத்தின் பின்னர் எனது கணவர் சார்பில் முன்னிலையாவதற்கு விருப்பம் தெரிவித்து போகம்பரை சிறைச்சாலைக்கு வருகைதந்து அவரைச் சந்தித்த ஜனாதிபதி சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் எனது கணவரிடம் விடயங்களைக் கேட்டறிந்ததன் பின்னர் ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்று அவரை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகக் கூறியிருந்தார். இருப்பினும் திடீரென குமார் பொன்னம்பலம் சுட்டுக்கொல்லப்பட்டார்.

1998 ஆம் ஆண்டு எனது கணவர் உள்ளடங்கலாக இராணுவத்தினர் ஐவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்ட தினத்திலிருந்து தற்போதுவரை பதவியிலிருந்த ஜனாதிபதிகளுக்கு மேன்முறையீட்டுக்கடிதங்களை அனுப்பிவைத்திருந்தாலும் இன்னமும் எவ்வித நிவாரணத்தையும் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. செம்மணி பற்றிய உண்மைகளை வெளிப்படுத்தியமையினால் எனது கணவர் உள்ளிட்ட சாட்சியாளர்கள் குற்றவாளிகளாக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டு 29 ஆண்டுகள் கடந்திருக்கின்றன. ஆனால் இதற்கு இடைப்பட்ட காலத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டு வெறுமனே 5 - 10 வருடங்களுக்குக் குறைந்த ஆண்டுகள் மாத்திரம் சிறையில் இருந்த பலர் கடந்த 2024 ஆம் ஆண்டு வரை ஆட்சியிலிருந்த ஜனாதிபதிகளால் பொதுமன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இப்போது உங்களுக்கு இந்தக் கடிதத்தை எழுதுவதற்குக் காரணம் உங்களுக்கோ அல்லது உங்களது அரசாங்கத்துக்கோ எந்தவொரு தரப்பினரையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதனாலாகும். எனவே நீதியை நிலைநாட்டும் வகையில் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமித்து கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை உள்ளடங்கலாக செம்மணி சோதனைச்சாவடியில் நடைபெற்ற குற்றங்கள் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொண்டு உண்மையான குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுங்கள். 1998 ஆம் ஆண்டு முதல் இப்போது வரை செம்மணி சோதனைச்சாவடியை அண்மித்த பகுதிகளில் 5 மனிதப்புதைகுழிகள் கண்டறியப்பட்டிருக்கின்றன.

உங்களுக்கு இக்கடிதத்தை எழுதும் 2025 ஆம் ஆண்டிலும் அங்கு மனிதப்புதைகுழியொன்று கண்டறியப்பட்டிருக்கிறது. எனவே 1998 ஆம் ஆண்டு மேல்நீதிமன்றத்தில் எனது கணவர் கூறிய சகல விடயங்களும் உண்மையானவை என்பதை இப்போது ஒட்டுமொத்த உலகமும் அறிந்துகொண்டிருக்கிறது. இதுவரை காலமும் அதிகாரத்தில் இருந்த ஆட்சியாளர்கள் இராணுவத்தின் உயரதிகாரிகளைக் காப்பாற்றி, கீழ்மட்டத்தில் இருந்தவர்களைத் தண்டித்துவிட்டு, குற்றமிழைத்த இராணுவத்தினருக்கு தாம் தண்டனை அளித்திருக்கிறோம் என்று சர்வதேச சமூகத்துக்குக் கூறிவந்திருக்கிறார்கள்.

இப்போது தண்டனையை அனுபவித்து வரும் இராணுவ வீரர்கள் தண்டனை பெறும்போது கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, டி.எம்.ஜயதிலக, ஜே.எம்.ஜயசிங்க, ஏ.எஸ்.பி.பெரேரா ஆகியோர் இராணுவத்தில் இணைந்து முறையே 7, 5, 2 மற்றும் ஒரு வருடங்களே கடந்திருந்தன. அதேபோன்று பொலிஸ் பரிசோதகர் பொலிஸில் இணைந்து ஒரு வருடமே ஆகியிருந்தது. அவர்களால் 250 - 300 பேரைக் கைதுசெய்து படுகொலை செய்திருக்க முடியுமா? இவ்வாறானதொரு பின்னணியில் யுத்தகாலத்தில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சகல படுகொலைகள் மற்றும் சித்திரவதைக்கூடங்கள் நடாத்தப்பட்ட விதங்கள் என்பன பற்றிய விபரங்களை வெளிப்படுத்துவதற்கு எனது கணவர் தயாராகிவருகிறார்.

இந்நிலையில் எவ்வித சாட்சியங்களுமின்றி குற்றவாளிகளாக்கப்பட்ட எனது கணவர் உள்ளிட்ட இந்த இராணுவத்தினருக்கு நியாயமான நிவாரணத்தைப் பெற்றுக்கொடுக்கக் கூடியவகையில் ஆணைக்குழுவொன்றை நியமித்து செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பில் எனது கணவர் அளித்த வாக்குமூலம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து அவர்களுக்கும், யாழ்ப்பாணத்தில் தமது அன்புக்குரியவர்களை இழந்த தரப்பினருக்கும் நீதியை நிலைநாட்டுவதற்கு நடவடிக்கை எடுங்கள். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற யுத்தக்குற்றங்களுடன் தொடர்புடைய சகல இராணுவ உயரதிகாரிகளினது பெயர் விபரங்களை எதிர்வருங்காலங்களில் வெளியிடுவதற்கு எனது கணவர் தயாராகிவருகிறார். எனவே எனது கணவரால் என்னிடம் கையளிக்கப்பட்ட இந்தக் கடிதம் தொடர்பில் உரியவாறு அவதானம் செலுத்துமாறு உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு இவ்விடயம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையிடமும் முறைப்பாடளிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். எனது கணவர் சோமரத்ன ராஜபக்ஷ சட்டவிரோதமான முறையில் தண்டிக்கப்பட்டிருக்கிறார். எனவே செம்மணி விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்றை முன்னெடுக்குமாறும், அதில் சாட்சியமளிப்பதற்குத் தான் தயாராக இருப்பதாகவும் எனது கணவர் தெரிவித்துள்ளார்.

1999 - 2024 ஆம் ஆண்டு வரை அதிகாரத்திலிருந்த ஜனாதிபதிகள் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உயர் மட்டத்தினர் எனச் சந்தேகிக்கப்படும் பலரை விடுதலை செய்திருப்பதுடன் இலங்கை மத்திய வங்கி குண்டுவெடிப்பு, புறக்கோட்டை குண்டுவெடிப்பு, நாட்டின் தலைவர்கள் படுகொலை, பாடசாலை மாணவர்கள் மீதான தாக்குதல், பிக்குகள் மீதான தாக்குதல் என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களை விடுதலை செய்வதற்குப் பரிந்துரைகளை வழங்கியிருக்கிறார்கள். அவ்வாறிருக்கையில் மரணதண்டனை விதிக்கப்பட்டு 29 வருடகாலமாக சிறையில் இருந்துவரும் எனது கணவர் உள்ளிட்ட ஐவருக்கு மன்னிப்பு வழங்குமாறு உரிய கட்டமைப்புக்களுக்குப் பரிந்துரைக்கமுடியாதது ஏன் என்பது புரியவில்லை என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-7)


லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு. வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.

(4963)

UK-1350, Australia-2050, Canada-2550, India-1490, Germany-1990, Italy-2250, Swiss-2480, France-2180

Western Union · MoneyGram · Ria Money Transfer

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
தொடர்புகளுக்கு
077 839 3974, 076 889 1308


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிராக மீண்டும் ஜெனிவாவில் தீர்மானம்

## வலுவாக எதிர்கொள்வோம் என்கிறார் அமைச்சர் விஜித ஹேரத்

**(கொழும்பு)**

**ஜெனிவா மனித உரிமைகள் மீளாய்வுக் கூட்டத் தொடரில் பிரித்தானியா, கனடா, வடக்கு மாசிடோனியா, மலாவி மற்றும் மொண்டெனேகுரோ உள்ளிட்ட நாடுகளின் அனுசரனையுடன் இலங்கை குறித்து தீர்மானம் கொண்டு வரப்பட உள்ள நிலையில், இந்த விடயம் குறித்து பன்னாட்டு இராஜதந்திரிகளை சந்தித்து கலந்துரையாட அரசாங்கம் தீர்மானித் துள்ளது.**



தீர்மானங்களை வலுவாக எதிர்கொள்ள முடியும் என்பதுடன், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க் வழங்கிய உத்தரவாதத்தின் பிரகாரம் செப்ரெம்பரில் இடம் பெறவுள்ள மனித உரிமைகள் மீளாய்வுக் கூட்டத் தொடர் இலங்கைக்கு சாதகமாகவே அமையும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள பன்னாடுகளின் மனித உரிமைகள் தொடர்பான மீளாய்வு கூட்டத் தொடரின் போது இலங்கைக்கு எதிராக தீர்மானம் ஒன்றை கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. பிரித்தானியா மற்றும் கனடா உள்ளிட்ட சில நாடுகள் இந்தத் தீர்மானத்தை மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்க உள்ளது.

இருப்பினும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க் இலங்கைக்கு விஜயம் செய்து நேரடியாக நிலைமைகளை ஆராய்ந்து சென்றுள்ளார்.

அவர் வழங்கிய உத்தரவாதத்தின் பிரகாரம் செப்ரெம்பரில் இடம்பெறவுள்ள மனித உரிமைகள் மீளாய்வு கூட்டத் தொடர் இலங்கைக்கு சாதகமாகவே அமையும். வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாட்டில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் அரசாங்கம் நேர்மையாக செயற்படுகிறது என தெரிவித்தார்.

எவ்வாறாயினும் கடந்த கால மீறல்களுக்கு பொறுப்புக் கூறல் விடயத்தில் நிலவிவரும் அதிருப்தியை அடுத்து, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெற உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் மீளாய்வு கூட்டத் தொடரில், இலங்கைக்கு எதிராக மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக் கூறலை மையப் படுத்திய புதிய தீர்மானம் ஒன்றை முன்வைக்க சர்வதேச நாடுகள் தீவிர நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

இந்த நடவடிக்கையானது, இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்த சர்வதேச கண்காணிப்பையும், அழுத்தத்தையும் மீண்டும் அதிகரித்துள்ளது. (நி)

மேலும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான விசேட பிரதிநிதிகள் குழு ஜெனிவாவுக்கு செல்லவும், தீர்மானத்தை முன்வைக்க உள்ள நாடுகளுடன் நேரடியாக பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவும் உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

மனித உரிமைகளை பாதுகாப்பதிலும் கடந்தகால விடயங்களில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதிலும் முழு அளவிலான ஈடுப்பாடுடன் அரசாங்கம் செயற்படுகிறது.

ஆகவே இலங்கைக்கு எதிராக எந்தவொரு நாடும் ஜெனிவாவில் கொண்டு வரக்கூடிய

# பெண்களிடையே அதிகரிக்கும் நுரையீரல் புற்றுநோய்

(கொழும்பு)

இலங்கையில் நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதாக சுவாச நோய்களுடன் தொடர்புடைய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

நுரையீரல் புற்றுநோய்க்கு புகைப்பிடித்தல் முக்கிய காரணியாக இருக்கின்ற போதிலும் இலங்கையில் புகைப்பிடித்தல் பழக்கமுடைய பெண்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளதாக வெலிசற தேசிய சுவாச நோய் வைத்தியசாலையின் நிபுணர் வைத்தியர் தமித் ரோட்ரிகோ தெரிவித்தார்.

தொடர்ந்தும் தெரிவித்த அவர், காற்று மாசடைதல் காரணமாகவே பெண்களிடையே நுரையீரல் புற்றுநோய் அதிகரித்துள்ளது.

ஆசியாவில் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளின் பிரதான நகரங்களை அண்மித்த பகுதிகளில் காற்று மாசடைதல் அதிகரித்துள்ளது.

மரபணு காரணிகளினாலும் நுரையீரல் புற்றுநோய் ஏற்படலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# தேசபந்துவை பதவியிலிருந்து நீக்க ஏகமனதாக தீர்மானம்

(கொழும்பு)

பதவி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை அவரது பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணை, தற்போது பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த பிரேரணை பாராளுமன்றில் விவாதிக்கப்பட்டு, வாக்கெடுப்புக்கு உட்படுத்தப்படவுள்ளது.

தேசபந்து தென்னகோன் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாகவும் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டதாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்த நிலையில், அவையனைத்தும் நிரூபிக்கப்பட்டன.

இந்நிலையில், தேசபந்து தென்னகோனை பதவியிலிருந்து நீக்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி)

# வரியை மேலும் குறைக்க நடவடிக்கை

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

தீர்வை வரி தொடர்பில் அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தைகள் இன்னும் நிறைவடையவில்லை. அந்த வகையில் மேலும் சில பொருட்களுக்கான வரியை எதிர்காலத்தில் குறைத்து கொள்ள முடியும் என எதிர்பார்ப்பதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவர் மங்கள விஜேசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சில பொருட்களுக்கான அமெரிக்காவின் தீர்வை வரியை மேலும் குறைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்காலத்தில் ஏற்றுமதியை விரிவுபடுத்துவதற்காக பல்வேறு நாடுகளுடன் தீர்வை வரி இணக்கப்பாடுகளை எட்ட வேண்டியது அவசியமாகும்.

அமெரிக்காவுக்கு வருடத்துக்கு சுமார் 2.9 பில்லியன் டொலர் பெறுமதியான ஏற்றுமதிகள் இடம்பெறுகின்றன. அதேவேளை 450 பில்லியன் டொலருக்கு இறக்குமதிகள் இடம்பெறுகின்றன.

கடந்த மாதங்களில் ஏனைய பிராந்தியங்களுக்கும் எமது ஏற்றுமதிகளை விரிவுபடுத்தியிருக்கின்றோம். அந்த வகையில் ஆபிரிக்காவுக்கான ஏற்றுமதிகள் உயர்வடைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

அத்தோடு எதிர்காலத்தில் இலங்கையின் சில ஏற்றுமதி பொருட்களுக்கு தீர்வை வரியை மேலும் குறைத்துக் கொள்வதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது எனத் தெரிவித்தார். (நி)

# ரணில்-மைத்திரி திடீர் சந்திப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் விக்ரமசிங்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு இடையில் திடீர் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகளை நீக்குவதற்கான யோசனை வெளியிடப்பட்டுள்ள நிலையில் இச் சந்திப்பு இடம் பற்றுள்ளது.



இதன்போது இந்த யோசனையை உயர் நீதிமன்றத்தில் சவால் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அவர்கள் விவாதித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சகத்தால் கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்ட யோசனையின் கீழ், அனைத்து முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் உத்தியோகபூர்வ குடியிருப்பு, செயலக கொடுப்பனவுக்கான கட்டணம் மற்றும் உத்தியோகபூர்வ போக்குவரத்துகள் ரத்து செய்யப்படுகின்றன.

இந்நிலையில் குறித்த யோசனை அதன் தற்போதைய வடிவத்தில் நிறைவேற்றப்பட்டால், ஐந்து முன்னாள் ஜனாதிபதிகளும், 97,500 ரூபாய் என்ற மாதாந்த ஓய்வூதியத்தைத் தவிர அனைத்து சலுகைகளையும் இழப்பார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 23 வருட சாதனையை முறிடித்து புதிய வரலாறு எழுதிய ஜடேஜா



இங்கிலாந்து மற்றும் இந்திய அணிகளுக்கு இடையிலான 5 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் சகல துறை துடுப்பாட்ட வீரர் ரவீந் திர ஜடேஜா மிகப்பெரிய சாதனை ஒன்றைப் படைத்துள் ளார்.

இந்திய அணி வெளிநாடுகளில் ஆடிய ஒரு டெஸ்ட் தொடரில் 6 ஆம் இலக்கத்தில் அல்லது அதற்குக் கீழான துடுப்பாட்ட வரிசையில் களமிறங்கி அதிக ஓட்டங்களைக் குவித்த வீரர் என்ற சாதனையை ரவீந்திர ஜடேஜா தன் வசப்ப டுத்தியுள்ளார்.

இதன்படி அவர் குறித்த தொடரில் 516 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதில் 5 அரை சதங்களும், ஒரு சதமும் உள்ளடங்கும்.

முன்னதாக விவிஎஸ் லக்ஷ்மன் கடந்த 2002 ஆம் ஆண்டு மேற் கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் 474 ஓட்டங்களைப் பெற்றதே சாதனையாக இருந்தது.

குறித்த சாதனையை 23 ஆண்டு களின் பின்னர் ரவீந்திர ஜடேஜா முறியடித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (3)




பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் முல்லைத்தீவு - வற்றாப்பளை மகாவித்தியாலய 16 வயது மற்றும் 18 வயது பெண்கள் அணியினர் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டனர். (படம் - சதிஷ்)



முல்லைத்தீவு பிரதேச செயலகங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்வு கடந்த புதன்கிழமை மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் கரைதுறைபற்று பிரதேசசபை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

# லெஜன்ட்ஸ் ரி- 20 தொடரில்
## கிண்ணத்தை வென்றது தென்னாபிரிக்கா



உலக சம்பியன்ஷிப் ஒப் லெஜ ண்ட்ஸ் தொடரின் இறுதிப் போட் டியில் தென்னாபிரிக்கா சம்பி யன்ஸ் அணி கிண்ணத்தை வென்றுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற குறித்த இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் சம்பியன்ஸ் மற்றும் தென்னாபிரிக்க சம்பியன்ஸ் அணிகள் மோதின.போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் சம்பியன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மா னித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத் தாடிய பாகிஸ்தான் சம்பியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 195 ஓட்டங்களைப் பெற்றுக் கொண் டது.

இந்நிலையில் 196 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க சம்பியன்ஸ் அணி 16.5 ஓவர்கள் நிறைவில், 1 விக்கெட்டினை மாத் திரம் இழந்து வெற்றி இலக்கை கடந்தது. துடுப்பாட்டத்தில் ஏபிடி வில்லியர்ஸ் 120 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத் தார்.

இந்த நிலையில் உலக சம் பியன்ஷிப் ஒப் லெஜண்ட்ஸ் கிரிக்கெட் தொடருக்கான கிண் ணத்தை தென்னாபிரிக்க சம் பியன்ஸ் அணி சுவீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)


# மரண அறிவித்தல்

## இராமநாதன் நிமலராசா



மலர்வு 26.05.1973 உதிர்வு 01.08.2025

வன்னேரிக்குளத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட இராமநாதன் நிமலராசா(நிமலன்) கடந்த (01.08.2025) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான இராமநாதன் - யோக ம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் செல்வநாயகம் - சந்திரவதனி தம்பதியரின் மரு மகனும் ஜெயந்தினியின் அன் புக் கணவரும் நிதர்சன் (London), வானுஷன் (London), ஹரிவர்சன் ஆகியோரின் அன் புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2025) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஐயனார்புரம் இந்து பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
077 982 1750

(1411)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

Botanical Name- citurullus lanatus
Family- cucurbitaceae

## தர்ப்பூசணி



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

தர்ப்பூசணி என்றதும் கோடை யின் வெம்மையில் இருந்து நம்மை காத்துக் கொள்ளக்கூடியது. அதில் ஏராளமான சத்துக்கள் நிறைந்துள் ளது.


குறிப்பாக தர்ப்பூசணியில் இரும்புச்சத்து உள்ளது. அதை விட உயிர்ச்சத்து A, C, B1, B6 மற்றும் பொட்டாசியம், மக்னீசியம் போன்ற தாது உப்புக்களும் உள்ளன. நீர்ச்சத்து என்பதால் உடல் சூட்டைக் குறைக் கும். அதேநேரத்தில் கோடைக் காலங்களில் கிடைக்கக்கூடிய இந்த தர்ப்பூசணியை சாப்பிடுவதால் உடலில் உள்ள அதிக கொழுப்பைக் கரைக்கும். மேலும் கெட்ட கொலஸ் ரோலை குறைக்கும் தன்மையும் உள்ளது. இரத்த ஓட்டத்தை சீராக்கி உயர் இரத்த அழுத்தத்தை குறைத்து விடும். அத்துடன் இரத்தக் குழாய்களில் படியக்கூடிய கழிவுகளை சுத்தப்படுத்தும். மற்றைய பழங்களில் இல்லாத லைட்டோ நியூற்றியன்ஸ் என்ற சத்துக்கள் அதிகமாக காணப் படுவதால் இது உடலை ஆரோக்கி யமாகவும் சுறுசுறுப்பாகவும் வைத் திருக்க உதவுகிறது.

இதில் உள்ள மூலப்பொருட்கள் இரத்தம் வழியாகச் சென்று நரம்புக ளுக்கு கூடுதல் சக்தியைத் தருகிறது.

Citruline என்ற அரியவகைப் புரதச் சத்து அதிக அளவில் உள்ளது. இது இரத்த நாளங்களை விரிவ டையச் செய்வதோடு இரத்த ஓட் டத்தை அதிகரிக்கும். தர்ப்பூசணியைச் சாப்பிட்டதும் அதில் உள்ள "சிட்ரூலின்" வேதியல் மாற்றம் அடைந்து "அர்ஜினன்" என்ற வேதியற்பொரு ளாக மாறுகிறது. இது இதயத்தையும் இரத்த ஓட்டம் சம்பந்தமான உடல் உறுப்புக்களையும் ஊக்குவிக்கிறது.

தர்ப்பூசணிக்கு உடல் உஷ் ணத்தை குறைத்து மனதை அமைதிப்படுத்தும் தன்மை உண்டு. பசியை அடக்கக்கூடியது. சிறுநீரை நன்றாக வெளியேற்றும் தன்மையுண்டு. இப் பழத்தில் இருக்கும் உயிர்ச்சத்து A கண்பார்வை, மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்கிறது.

அத்துடன் இதிலுள்ள அன்டி அக்ஸிடென்ட் மற்றும் லைகோபின் போன்றவை கலங்களை அழிவிலி ருந்து மீட்டு உடலைப் பாதுகாக்கின்றது. அத்துடன் சருமத்தை பளபளப்பாகவும், ஈரலிப்பாகவும் வைத்திருக்க உதவுகி ன்றது. கலோரிகள் குறைவாகவும், நீர்ச்சத்து அதிகமாகவும் இருப்பதால் எடை இழப்பிற்கு உதவுகிறது.



இப்பழம் ஆப்பிரிக்காவை பூர் வீகமாகக் கொண்ட பூக்கும் தாவரமாகும். வத்தகப்பழம் எனவும் அழைக்கப்படும். இப்பழத்தில் காணப்படும் Lucopene மார்பு, நுரையீரல், கர்ப்பப்பை, பெருங்குடல் போன்ற இடங்களில் ஏற்படும் புற்றுநோயைத் தடுக்கக் கூடியது. தர்ப்பூசணியில் 90% அளவிற்கு நீர் உள்ளது.

கோடைக்காலங்களில் இதைச் சாப்பிட்டால் நீரிழப்பு (Dehydradtion) பிரச்சினைகள் ஏற்படாது. தர்ப்பூசணியில் உள்ள லைக்கோபீன் எலும்பை பாதுகாக்கும். எலும்பு நோயான ஆஸ்டியோ போரோசிஸைத் Costeoporosis தடுக்கும்.

இதிலுள்ள உயிர்ச்சத்து C நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். காயங்களை விரைவாக ஆற்றும் தன்மையுண்டு. இப்பழத்திலுள்ள உயிர்ச்சத்து B6 நமது மூளையில் பல வேதியற்பொருட்களை உற்பத்தி செய்ய உதவக்கூடியது. இந்த வேதியற் பொருட்கள் தான் நமது நடவடிக்கை மற்றும் மனநிலைக்கு காரணமாக அமைகிறது.

உயிர்ச்சத்து B6 இல் ஏற்படும் குறைபாடு மனஅழுத்தம், மனச்சோர்வு, பதற்றம் போன்றவற்றை ஏற்படுத்தும். தர்ப்பூசணியை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் மனநிலை அமைதியாக நன்றாக இருக்கும். இதனால் தான் சித்தர்கள் இப்பழங்களை சாத்வீக குணமுள்ள அதாவது சாந்தமான மனநிலையை ஏற்படுத்தும் பழங்களாக குறிப்பிட்டுள்ளார்கள். இதில் அதிகளவு உயிர்ச்சத்து C காணப்படுவதால் மேலும் அதிகளவு சளி, ஆஸ்துமா போன்ற நிலைமைகள் ஏற்படுவதையும் தடுக் கக்கூடியது.

அத்துடன் சிறுநீரகத்துக்கு சிரமம் கொடுக்காமல் திரவக் கழிவுகளை வெளியேற்ற இப்பழங்கள் உதவும். இப்பழங்களில் flavonoid carotenoids போன்ற நிறமிகள் உள்ளன. இலை கட்டி, வீக்கம் போன் றவை ஏற்படுவதைத் தடுக்கின்றன. இப்பழங்களில் நார்ச்சத்தும் மற்றும் நீர்ச்சத்தும் அதிக அளவில் இருக்கிறது. அதனால் இது மலச்சிக்கலுக்கு சிறந்ததாகும்.

நெஞ்செரிச்சலாக இருந்தால் ஒரு தர்ப்பூசணியை நறுக்கி நான்கு அல்லது ஐந்து துண்டுகளை சாப்பிட்டால் சிறந்த பலனை பெறமுடியும். குறைவான விலையில் நிறைவான பலனைத் தரக்கூடியது தர்ப்பூசணியாகும். இப்பழங்களை சாப்பிட்டு வருவதால் உயர்ந்த நச்சுத்தன்மை எதிர்ப்பு உள்ளது.

இரத்த சர்க்கரை அளவையும் குறைக்கக்கூடியது. அதாவது சர்க்கரை உயர்த்தும் திறன் குறைவாக்க காணப்படும்.

எனவே நீரிழிவு நோயாளிகள் தர்ப்பூசணியை யூஸாக அடித்து குடியாமல் 30 கிராம் அளவு பழத் துண்டுகளை தினமும் சப்பிச் சாப்பிட லாம். தர்ப்பூசணி பழச்சாறுடன் இளநீர் கலந்து அருந்தினால் உடற்சூடு தணிந்து வயிற்றுப் புண்ணையும் ஆற்றும் தன்மையும் அதிகரிக்கும்.

# இராசிபலன்

04.08.2025
ஆடி 19 , திங்கட்கிழமை
தசமி முற்பகல் 11.19 மணிவரை

அனுசம் முற்பகல்-9.38 மணிவரை
சுப நேரம் -12.04-1.34 மணிவரை
இராகுகாலம் 7.34-9.04 மணிவரை

சந்திராஷ்டமம்: பரணி, கார்த்திகை.

வளவன்




உறவினர் நண்பர்களி டையே மனஸ்தாபம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வேலைச் சுமை கூடும், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.




பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமை யடைவீர்கள், மற்ற வர்கள் நலன்கருதி எடு த்த முயற்சிகள் கைகூடும், தன் னம்பிக்கை துளிர்விடும் நாள்.




புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேர லாம், தேவைகள் பூர்த் தியாகும், பெரிய மனி தர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வங் கிச் சேமிப்பு உயரும் வாய்ப்புண்டு.




பலரது அன்புக்கு பாத்தி ரமாவீர்கள், திடீர் பணவரவால் சந்தோசம் கிடைக்கும், வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோ ங்கும் நாள், எடுத்த காரியங்களில் முன்னே ற்றம் காணும் நாள், உறவினர் கள் சந்திப்பால் உள்ளம் மகிழ் வீர்கள்.




பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெரு மையடைவீர்கள், இல் லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, சுபசெய்திகள் வந்து சேரலாம்.




ஆன்மீகச் சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடி வுக்கு வரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




செய்தொழில் மேன்மை யுண்டு, திட்டமிட்ட காரி யங்கள் கைகூடும் வாய் ப்புண்டு, வசதி வாய் ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், போசன சுகமுண்டு.




அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டு வீர்கள், வியாபார விருத்தி உண்டு, காலை நேரத்திலேயே கலகல ப்பான செய்திகள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள்.




எடுத்த காரியங்களை நிறைவேற்ற உறவினர் வழியில் ஒத்துழைப் புக்கள் கிடைக்கும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.




கோபத்தைக் குறைத் துக் கொள்வது நல்லது, சுப விரயங்கள் அதிகரி க்கும் நாள், அதிகாரிகளை அனு சரித்துச் செல்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.




எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்பு ண்டு, இழுபறியாக இரு ந்த காரியங்களில் முன் னேற்றம் காணும் நாள், குடும்பத் தில் நிலவிய குழப்பங்கள் அகலும்.

திறமையையும் மிஞ்சி விடக்கூடிய ஆற்றல் நிலையான பயிற்சிக்கு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)


நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபமும் இணைந்து வழங்கும் 'தெய்வீக இசையரங்கு' இன்று திங்கட்கிழமை மாலை 6.45 மணி முதல் 8.30 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் இசையரங்கு நிகழ்வில் பாட்டு-செல்வன் கருணாகரன் தசாணன், வயலின் -செல்வன். குமரேசன் சயந்தன், மிருதங்கம்-செல்வன் சேதிலிங்கம் சிவஜெனன், கெஞ்சிரா-சி. நித்தியானந்தம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள குழலிசை நிகழ்வில் புல்லாங்குழல்-கு. நக்கீரன், வயலின்-இ.நிறோசன், மிருதங்கம்-ந.கேதாரநாத், கடம்-ஸ்ரீ.நிதர்சன், முகர்சிங்-நி.மோகனதர்சன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (3)




# நல்லைக்கந்தனை தரிசித்தார் பிரதமர் ஹரிணி அமரசூரிய



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய நேற்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் , யாழில் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்று வருகிறார்.

இந்நிலையில் நேற்றுக் காலை நல்லூர் ஆலயத்திற்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டார்.

நல்லூர் ஆலய மகோற்சவ திருவிழாவின் 6ஆம் திருவிழா நேற்றைய தினம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (8-33-104)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அச்செழு மத்தி திருவருள்மிகு நாகதம்பிரான் ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் ஆலய மஹோற்சவப் பெருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை இரவு 6 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளார். (3)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 160 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 250 | 170 | 250 |
| தக்காளி | 160 | 200 | 150 | 130 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 320 | 300 | 250 | 200 |
| கோவா | 260 | 250 | 300 | 200 | 300 |
| கரட் | 400 | 400 | 350 | 340 | 450 |
| பூசணி | 100 | 140 | 100 | 80 | 100 |
| புடோல் | 100 | 100 | 100 | 80 | 150 |
| வாழைக்காய் | 150 | 120 | 100 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 150-300 | 350 | 250 | 250 |
| பெரிய வெங்காயம் | 140 | 200 | 120 | 100 | 140 |
| பாகற்காய் | 300 | 400 | 350 | 300 | 400 |
| வெண்டக்காய் | 150 | 100 | 150 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 280 | 300 | 200 | 250 | 350 |
| பயற்றங்காய் | 200 | 200 | 100 | 150 | 200 |
| லீக்ஸ் | 300 | 280 | 150 | 200 | 300 |
| பீற்றூட் | 120 | 150 | 250 | 120 | 160 |
| கறிமிளகாய் | 600 | 600 | 600 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 600 | 350 | 500 |
| போஞ்சி | 800 | 800 | 800 | 550 | 800 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 250 | -- | 180 |
| கீரை – 1 பிடி | 100 | 60-120 | 150 | 60 | 100 |
| தேசிக்காய் | 200 | 60 | 150 | 100-200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 100-200 | 140-180 |
| இராசவள்ளி | 800 | 600 | 500 | 500 | 850 |
| வெங்காயப்பூ | 450 | 300 | 350 | 250 | 400 |
| முள்ளங்கி | 150 | 160 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 110 | 200 |

# காட்டுப்பகுதி துப்புரவு இருவர் கைது

(வவுனியா)

வவுனியா, நெடுங்கேணி, தண்டுவான் பகுதியில் சட்டவிரோதமாக காட்டுப்பகுதியைத் துப்புரவு செய்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும், மாங்குளம் வனவளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவைச் சேர்ந்த 23 மற்றும் 40 வயதான இருவரே கைது செய்யப்பட்டுள்ளதாக நெடுங்கேணிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (8-250)

# நிதியுதவி வழங்கி வைப்பு

(கிளிநொச்சி)

அரசாங்கத்தின் இலவச மானிய மின்னிணைப்பு செயற்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படாத மின்னிணைப்பினை பெற வசதியற்ற 4 குடும்பங்களுக்கான நிதியுதவி வழங்கிவைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்ற நிதியுதவி கொடுப்பனவு நிகழ்வில் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் உதவித்திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன், ஸ்ரீ சத்ய சேவா மன்றத்தின் உறுப்பினர்கள், மாவட்ட செயலக விடய உத்தியோகத்தர்கள் பிரதேச கிராம மட்ட உத்தியோகத்தர்கள், பயனாளிகள் கலந்துகொண்டனர். (8)

## கா! நல்லைக் குமரேசனே!

விதியென்ற வதிகாரி விளையாட வருமுன்னர்
விரைந்தோடி வரவேண்டுமே!
கதியென்று வுனைநின்று துதிகொண்டு பாடவே
கனிந்தின்பந் தரவேண்டுமே!
மதிநின்று சதிவென்ற வதிகார சொரூபனே!
மறையான விறைஞானனே!
எதிர்கொண்ட இடர்யாவும் இடர்பட வழிக்கவா!
எழில்நல்லைக் குமரேசனே!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்.

## சொல்லது ஓம் சரவணபவ

அல்லது அனல் ஆகும்
இல்லது இலது ஆகும்
நல்லூர் கந்தனைக் கும்பிட்டால்
சொல்லது ஓம் சரவணபவ

மருத்துவர் சி.யமுனாநந்தா

## எம் துயர் களைவாய் நல்லைக் கந்தா

நல்லையம்பதியில்
வீற்றிருந்து
அருள்பாலிக்கும் நல்லைக்கந்தா
இன்னல்கள் தீர்க்கும்
கந்தா கடம்பா கார்த்திகேயா
எம் துயர் களைந்து
நல்லருள் புரிவாய்
நல்லையம்பதி வாழ்
நல்லூர்க் கந்தா

ச.செல்வக்குணசந்திரன்,
பருத்தித்துறை

## வீதியில் ஒரு தரம் விழுந்து கும்பிடுவோம்

"சந்தத் திருப்புகழ் ஒலித்திடவே
சண்முகப் பெருமான்
நல்லை வீதியுலா வருகின்றார்
வந்தவினைகளும் வருகின்ற
வல்வினைகளும் கந்தன்
என்று சொல்லியே நாமும்
வீதியில் ஒரு தரம் விழுந்து
கும்பிடுவோம்"

திருமுறை செல்வர்
பாலசுப்பிரமணியம்
வேலணை பாலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிடிவதையில் ஈடுபடுவோருக்கு மன்னிப்பு வழங்கப்பட மாட்டாது

## பிரதமர் ஹருணி அறிவிப்பு



(வவுனியா)

பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் மாணவர் அரசியலுக்கு எந்த வகையிலும் தடை ஏற்படுத்தப்பட மாட்டாது என்றும், ஆனால் வன்முறை மற்றும் பகிடிவதைக்கு எந்த வகையிலும் மன்னிப்பு வழங்கப்பட மாட்டாது என கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர், பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

வவுனியா பல்கலைக் கழகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நூலகக் கட்டிடத்தைத் திறந்து வைத்ததைத் தொடர்ந்து, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், நிர்வாக அதிகாரிகள் மற்றும் மாணவர்களுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு மேலும் உரையாற்றிய பிரதமர், "கல்வித்துறையில் அளவுசார்ந்த வளர்ச்சியை ஏற்படுத்துவதை விட, உலகை எதிர்கொள்ளக் கூடிய மாணவர்களை உருவாக்கும் தரமான கல்வியை வழங்கும் இடங்களாக பல்கலைக் கழகங்களை நிறுவுவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

எமது பல்கலைக்கழக முறைமை அண்மைக் காலமாக விரிவடைந்துள்ளது, ஆனால் அதன் தரத்தில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை. எமது பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று வெளியேறும் மாணவர்கள் உலகை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

பாடசாலைக் கல்வி மூலம் செய்ய வேண்டிய பணிகள் முறையாகச் செய்யப்படாததால், பாடசாலையில் கற்றுக்கொள்ள வேண்டியவற்றைப் பல்கலைக் கழகத்தில் கற்பிக்க வேண்டியுள்ளது. இந்த நிலைமை இந்த நாட்டின் உயர்கல்வி முறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒரு பிள்ளை பாடசாலையை விட்டு வெளியேறும்போது, அவர்கள் தொழில் உலகிற்கு அல்லது உயர்கல்விக்கு தயாராக இருப்பதை உறுதி செய்ய நாம் மறந்துவிடக் கூடாது. புதிய கல்வி சீர்திருத்தங்கள் மூலம் அந்த நிலையை மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், ஒரு பல்கலைக்கழக மாணவர் சமூகமாக, அவர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுப்பதற்கும், போராட்டம் நடத்துவதற்கும், மாணவர் அரசியலை மேற்கொள்வதற்கும் நாங்கள் எந்தத் தடையையும் ஏற்படுத்தப் போவதில்லை.

ஆனால் பல்கலைக் கழகங்களில் எந்தவிதமான வன்முறை, பகிடிவதை அல்லது அமைதியான மாணவர் சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் எதற்கும் நாங்கள் இடமளிக்கப் போவதில்லை. இதுபோன்ற விடயங்களை மன்னிக்க நாங்கள் தயாராக இல்லை.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்குவதற்குத் தேவையான வசதிகளை வழங்க வேண்டும் என்ற கொள்கை முடிவில் அரசாங்கம் இருப்பதுடன், அந்த நோக்கத்திற்காக அது செயற்பட்டு வருகின்றது" என மேலும் தெரிவித்தார். (8)

# யாழ். மாவட்ட செயலகத்தின் விசேட நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளீன் ஸ்ரீலங்கா செயற்றிட்டத்தின் ஒரு அங்கமாக "இதயபூர்வமாக யாழ்ப்பாணத்திற்கு - ஒற்றுமையின் தூய்மையான பயணம்" எனும் கருப்பொருளிலான நடமாடும் சேவையானது எதிர்வரும் 14 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது

பருத்தித்துறை, கரவெட்டி மற்றும் மருதங்கேணி ஆகிய பிரதேச செயலாளர்கள் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகும் நடமாடும் சேவை மறுநாள் 15 ஆம் திகதி உடுவில், தெல்லிப்பளை மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலாளர்கள் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் உடுவில் பிரதேச செயலகத்திலும் நடைபெறவுள்ளது.

இவ் நடமாடும் சேவையில் ஆட்பதிவுச் சேவை, பிறப்பு இறப்புச் சான்றிதழ் வழங்கும் சேவைகள், ஓய்வூதியச் சேவைகள், வெளிநாட்டு வேலை வாய்ப்புச் சேவைகள், மோட்டார் வாகனப் பதிவுகள், கம்பனிப் பதிவுகள், சுகாதார சேவைகள் - கண் பரிசோதனை மற்றும் மருத்துவ சேவைகள், ஏற்றுமதிக்கான வாய்ப்புக்கள், வடக்கு மாகாணத்தின் சகல அமைச்சிற்குரிய சேவைகள், பிரதேச செயலகம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய சேவைகள் உள்ளிட்ட சேவைகள் நடைபெறவுள்ளது.

மேற்படி நடமாடும் சேவைக்கான முன்னாயத்த ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக, கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்திற்கும், உடுவில் பிரதேச செயலகத்திற்கும் - மேலதிக மாவட்ட செயலர் (நிர்வாகம்) கே. சிவகரன், மேலதிக மாவட்ட செயலர் (காணி) பா.ஜெயகரன், உதவி மாவட்டச் செயலாளர் உ.தர்சினி ஆகியோர் சகிதம் சென்று உரிய முன்னாயத்த அறிவுறுத்தல்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கினார்.

இவ் முன்னாயத்த ஏற்பாடுகளில் பருத்தித்துறையில் பருத்தித்துறை உதவிப் பிரதேச செயலாளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தரும், உடுவிலில் உதவிப் பிரதேச செயலாளரும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டார்கள். (8-33)

# யாழ்.மாநகரசபையின் அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் பிற்பகல் குடிநீர் விநியோகக் குழாயில் உடைவு ஏற்பட்டுள்ளமையினால் இன்று பிற்பகல் 8.30 மணியிலிருந்து நாளை காலை வரை K.K.S வீதிக்குச் செல்லும் நாவலர் வீதியில், யாழ்ப்பாணம் இலுப்பையடிச்சந்திப் பகுதியில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன் காரணமாக 5 மற்றும் 6 ஆகிய திகதிகளில் யாழ் மாநகர சபையின் குடிநீர் விநியோகம் தடைப்படும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்படும்.

அத்துடன் K.K.S வீதிக்குச் செல்லும் நாவலர் வீதியில் இலுப்பையடிச்சந்திப்பகுதியில் திருத்த வேலை இடம்பெறும் போது வீதித்தடை ஏற்படுத்தப்படும் வேளையில் அவ் வீதியில் பயணிப்பவர்கள் மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறும் மாற்று வீதியாக நாவலர் வீதியில் பிறவுண் வீதிச் சந்தியிலிருந்து பிறவுண் வீதி மற்றும் அரசடி வீதியூடாக கந்தர்மடம் சந்தியில் பலாலி வீதியை அடைய முடியும் எனவும் யாழ்.மாநகரசபை முதல்வர் அறிவித்துள்ளார். (8)

# கனரக வாகனம் செலுத்துவோருக்கு பொலிஸாரின் முக்கிய அறிவிப்பு

(தருமபுரம்)

கிளிநொச்சி நகரப் பகுதியில் கனரக வாகனம் செலுத்துவோருக்கு பாடசாலை ஆரம்ப, முடிவு நேரம் குறித்து விசேட அறிவிப்பு ஒன்று வெளியாகியுள்ளது.

பாடசாலை ஆரம்ப நேரமான காலை 6.40 தொடக்கம் 7.30 மணி வரையும், பாடசாலை முடிவுறும் நேரமான பிற்பகல் 1.30 தொடக்கம் 2.00 மணி வரையும் கிளிநொச்சி நகர பகுதிகளுக்குள் கனரக வாகனங்கள் அனுமதிக்கப்படமாட்டாது.

கிளிநொச்சி பொலிஸார் இந்த அறிவிப்பை விடுத்துள்ள நிலையில் பாடசாலை நாட்களில் இது நடைமுறையில் இருக்கும் என குறிப்பிட்டுள்ளனர்.

பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பாடசாலை மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் போக்குவரத்தை மேற்கொள்வதற்காக கிளிநொச்சி பொலிஸார் மனித நேய அடிப்படையில் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தொடர்ந்து ஏற்படும் விபத்துக்களை தவிர்ப்பதற்காக இவ்வாறான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (8-316)

# வடக்கு,கிழக்கு மாகாணங்களுக்கு

## சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வழங்குங்கள்

### முல்லைத்தீவில் கவனயீர்ப்பு!




(பனிக்கன்குளம்)

இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்டத்தின் சிலாவத்தை தெற்கு பகுதியில் நேற்றுகாலை போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

இதன்போது பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் குறித்த கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

தொடர்ச்சியாக வடக்கு-கிழக்கு பகுதிகளில் அரசினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்ற நில ஆக்கிரமிப்புக்கள், மத சுதந்திர மீறல்கள், ஏனைய வன்முறைகள் இடம்பெறாமல் இருப்பதாக இருந்தால் வட கிழக்கு மக்கள் எதிர்பார்க்கின்ற அரசியல் தீர்வான சமஸ்டி முறையிலான அரசியல் தீர்வு வேண்டும் என்பதை வலியுறுத்தி முல்லைத்தீவு சிலாவத்தை பகுதியில் இக் கவனயீர்ப்பு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அத்துடன் தொடர்ச்சியாக 100 நாட்கள் வடக்கு-கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களிலும் சுழற்சி முறையில் குறித்த தரப்பினரால் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-281)

# கசிப்புடன் இருவர் கைது



(நெளுக்குளம்)

விசுவமடு மாணிக்கபுரம் பகுதியில் உள்ள சட்டவிரோத கசிப்பு விற்பனை நிலையம் மீது நடத்திய திடீர் சோதனையில், கசிப்புடன் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி.ஆர். ஹேரத்திற்குக் கிடைத்த தகவலையடுத்து, மேற்கொண்ட நடவடிக்கையின் போதே குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து,மாணிக்கபுரத்தில் விற்பனைக்காக தயாராக இருந்த 30 லீற்றர் கசிப்பு, அதற்காக பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் ஆவணங்கள் இன்றி இருந்த மற்றொரு மோட்டார் சைக்கிள் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் விசுவமடு றெப்பானா பகுதியைச் சேர்ந்த 51 மற்றும் 56 வயதுடையவர்கள் ஆவர்.

கைது செய்யப்பட்டவர்கள் மீது விசாரணைகள் நடைபெற்று வரும் நிலையில், அவர்கள் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.(8-290)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## நகைச்சுவை நடிகர் மதன்பாப் காலமானார்



(சென்னை)
தமிழ் சினிமாவில் நகைச்சுவை நடிகராக வலம் வந்த மதன் பாப் உடல்நலக்குறைவால் சென்னையில் நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 71.

இசையமைப்பாளராக திரை வாழ்க்கையைத் தொடங்கிய மதன்பாப், பின்னாளில், குணச்சித்திர நடிப்பில் முத்திரை பதித்தவர்.

மதன்பாப்பின் இயற்பெயர் கிருஷ்ணமூர்த்தி இவருக்கு சுசிலா என்ற மனைவியும், ஜனனி என்ற மகளும், அர்ஷித் என்ற மகனும் உள்ளனர்.

புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்த மதன்பாப், அதற்காக சிகிச்சை பெற்று மீண்டதாக கூறப்படும் நிலையில், நேற்று மாலை 5 மணியளவில் காலமானதாக தெரிவிக்கப்படுகிறது.

அவரது மறைவுக்கு திரையுலகத்தினர் மற்றும் ரசிகர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (நி)

## விளிம்பில் 3 ஆம்

## கவலையில் 

(வோஷிங்டன்) ................................
**அமெரிக்காவின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ரஷ்யாவை நோக்கி இரண்டு அணுசக்தி நீர்மூழ்கி கப்பல்களை அனுப்ப உத்தரவிட்டதாக அறிவித்துள்ள நிலையில், இது சர்வதேச அளவில் கடும் விவாதத்திற்கு உரியதாக மாறியுள்ளது.**

ட்ரம்ப் நேற்று முன்தினம் வெளியிட்ட பதிவில், "ரஷ்ய முன்னாள் ஜனாதிபதியும் பாதுகாப்பு சபைத் துணைத் தலைவருமான டிமிட்ரி மெட்வெடேவ் கூறிய கருத்துகள் எனக்குள் பதற்றத்தை ஏற்படுத்தின. எனவே ரஷ்யா அருகே இரண்டு அணுஉபரி கப்பல்களை நிலைநிறுத்த உத்தரவிட்டேன்" என குறிப்பிட்டார்.

அவரது இந்த அறிவிப்பு, அணுசக்தி ஆயுதங்களைத் தாங்கக்கூடிய அமெரிக்க நீர்மூழ்கி கப்பல்கள், ரஷ்யா உள்ளிட்ட முக்கிய பகுதிகளின் அருகே நிலை நிறுத்தப்படலாம் என்ற மூன்றாம் உலகப் போருக்கான அச்சத்தை தூண்டியிருக்கிறது.

இந்த நிலையில், ட்ரம்பின் உத்தரவுக்குப் பதிலளித்துள்ள ரஷ்ய அரசு, "அமெரிக்க நீர்மூழ்கி கப்பல்களின் இயக்கங்களை நாங்கள் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். இந்த உத்தரவு தேவையற்ற மோதலுக்கு வழிவகுக்கும்" என தெரிவித்துள்ளது.


இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள ரஷ்ய பாராளுமன்ற உறுப்பினர் விக்டர் வோடொலாட்ஸ்கி, "உலகக் கடல்களில் ரஷ்யாவின் அணுசக்தி நீர்மூழ்கி கப்பல்கள், அமெரிக்காவை விட அதிக எண்ணிக்கையில் உள்ளன.

ட்ரம்ப் குறிப்பிடும் கப்பல்கள் எங்கள் கண்காணிப்பில் ஏற்கனவே உள்ளன. அவை எங்கு சென்றாலும், எங்கள் வரம்புக்குள் தான் இருக்கின்றன" எனக் கூறியுள்ளார்.

மேலும், "உலக அமைதிக்காக ரஷ்யா மற்றும் அமெரிக்கா இடையே புதிய ஒப்பந்தம் ஒன்று கட்டாயமாக வேண்டியதாக உள்ளது" என்றும் அவர் வலியுறுத்தினார்.

ரஷ்யாவும், அமெரிக்காவும் உலகில் அணுசக்தி இயக்கம் கொண்ட நீர்மூழ்கி கப்பல்களை அதிக அளவில்

## ஈரான் வான்வெளி முழுமையாக மீள்திறப்பு




(டெஹ்ரான்)
**இஸ்ரேலுடனான போர் காரணமாக மூடப்பட்ட வான்வெளியை மீண்டும் திறந்துள்ளதாக ஈரான் அறிவித்துள்ளது.**

இதுகுறித்து ஈரானின் அதிகாரபூர்வ செய்தி நிறுவனம் ஐஆர்என்ஏ வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'தெஹ்ரானில் உள்ள மெஹ்ராபாத் மற்றும் இமாம் கொமேனி சர்வதேச விமான நிலையங்களும், ஈரான் நாட்டின் வடக்கு, கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கில் உள்ள அனைத்து விமான நிலையங்களும் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

மேலும், ஈரானில் முழுமையாக விமானங்கள் இயங்கத் தயாராக உள்ளன." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் ஜூன் 13-ம் திகதி இஸ்ரேல் வான்வழித் தாக்குதலை தொடங்கிய பின்னர் ஈரான் தனது வான்வெளியை முழுவதுமாக மூடியது. இதன் பின்னர் கடந்த ஜூன் 24 இல் இரு நாடுகளுக்கும் இடையே போர்நிறுத்தம் அமலுக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது.

## கூட்ட நெரிசலில் சிக்கி 48 பாலஸ்தீனியர்கள் பலி

### நிவாரணத்திற்கு காத்திருந்த வேளையில் அவலம்

(ஜெருசலேம்)
காசா உதவி மையத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி, பாலஸ்தீனர்கள் 48 பேர் உயிரிழந்தனர்.

இஸ்ரேல்- ஹமாஸ் படையினர் இடையே நீண்ட நாட்களாக போர் நடந்து வருகிறது. காசாவில் இஸ்ரேல் படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.


இஸ்ரேல் இராணுவ தாக்குதலில், 60 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

[illegible] காத்திருந்த 1000 இற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதாகவும், இஸ்ரேல் பசி, பட்டினியை ஆயுதமாக பயன்படுத்துவதாகவும் ஐ.நா குற்றம் சாட்டி உள்ளது.

இஸ்ரேல் தாக்குதல் ஒரு பக்கம் மறுபக்கம் காசாவில் உள்ள ஜிகிம் கிராசிங்கில் உள்ள உதவி மையத்தில் ஏற்பட்ட, கூட்ட நெரிசலில் சிக்கி, பாலஸ்தீனர்கள் 48 பேர் உயிரிழந்துள்ளனர்.


மேலும் 12 இற்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

காசாவின் சுகாதார அமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம் உலகப்போர்
# சர்வதேசம்!



ைவத்துள்ள நாடுகளாக இருக்கின்றன.

இந்த அணுசக்தி நீர்மூழ்கிக் ப்பல்களைப் பற்றி பேசும் பாது. அவை சாதாரண கப் ல்கள் அல்ல. 20- 30 ஆண் களுக்கு ஒருமுறை மட்டுமே ரிபொருள் நிரப்ப வேண்டி வை.

இதனால், நீண்ட நாட்கள் கடலின் அடியில் மூழ்கிய நிலையிலேயே செயற்பட முடியும். மனிதர்கள் அதிக நாட்கள் உள்ளே இருக்க முடியாததால், சில மாதங்களுக்கு ஒருமுறை மட்டும் மேலே கொண்டுவரப்படும்.

எனினும் சில முக்கிய ரகசிய நடவடிக்கைகள் நடைபெறும் போது, ஒரு வருடம் வரை மேலே வராமலும் இயக்கப் படக்கூடும்.

இந்த சூழ்நிலையில், மூன்றாம் உலகப் போர் குறித்து வரும் வார்த்தைகள் வெறும் பேச்சாக மட்டும் இல்லாமல், நடைமுறைப்பட வாய்ப்பு உள்ளதாகவே சில சர்வதேச அணி பல நிபுணர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (நி)

## வெடிகுண்டுடன் விளையாடிய சிறுவர்கள்

* ஐவர் உயிரிழப்பு
* 12 பேர் படுகாயம்
* பாகிஸ்தானில் சம்பவம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் வயலில் புதைந்து கிடந்த வெடி குண்டை விளையாட்டுப் பொருள் என நினைத்து, சிறுவர்கள் எடுத்த போது அது வெடித்துச் சிதறியதில் 5 சிறுவர்கள் உயிரிழந் துள்ளனர். பாகிஸ்தானின் கைபர் பக்துங்க்வா மாகாணம், லக்கி மார்வாட் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அத்துடன் குறித்த சம்பவத்தில் 12 சிறுவர்கள் படுகாயமடைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சம்பவத்தில் காயமடைந்த சிறுவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதில் சில சிறுவர்களின் நிலைமை கவலைக் கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை பாகிஸ்தான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி)

## மரண தண்டனை விதிப்பு அமெரிக்காவில் அதிகரிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் அதிக மரண தண்டனை நிறை வேற்றப்பட்ட ஆண்டு என்றால் அது, 2015. அந்த ஆண்டில் 28 பேருக்கு மரண தண்டனை நிறை வேற்றப்பட்டது.

அதை மிஞ்சும் வகை யில் இந்தாண்டு மரணதண்டனைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இதுவரை முடிந்த ஏழு மாதங்களில், 27 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இன்னும் இருவருக்கு இந்த மாத இறுதியில் மரண தண்டனை நிறைவேற்றப் பட உள்ளது.


அதில் குறிப்பாக புளோரிடா மாகாணம் முதலிடத்தில் உள்ளது. இங்கு மட்டும் இந்தாண்டில் ஒன் பது பேருக்கான மரண தண்டனையை மாகாண கவர்னர் டீசான்டிஸ் உறுதி செய்தார்.

அமெரிக்காவில் மரண தண்டனை விஷ ஊசி, மின்சார நாற்காலி, விஷவாயு அறை, துப்பாக்கியால் சுடுதல், தூக்கு ஆகிய முறைகளில் நிறைவேற்றப்படுகிறது. (நி)

ச்சகத்தின் கூற்றுப்படி, ஜூன் மாதத்திலிருந்து குழந்தைகள் 89 பேரும், வயதானவர்கள் 65 பேரும் ஊட்டச்சத்து குறைபாட்டால் இறந்துள்ளனர்.

சர்வதேச நாடுகள், காசாவிற்கு மனிதாபிமான உதவிகளை அனுமதிக்க இஸ்ரேல் மீது அழுத்தம் கொடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

மை



## பாலஸ்தீன அரசு நிறுவப்படும்வரை ஆயுதங்களை கைவிடப் போவதில்லை

### ஹமாஸ் அறிவிப்பு

(காசா)

சுதந்திர பாலஸ்தீன அரசு நிறுவப்படும் வரை ஆயுதங்களை கைவிடப்போவதில்லை என்று ஹமாஸ் அமைப்பு அறிவித்துள்ளது.

காசாவில் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முக்கிய இஸ்ரேலிய கோரிக்கைக்கு, இந்த பதிலை ஹமாஸ் வெளியிட்டுள்ளது.

முன்னதாக, காசா போரில் 60 நாள் போர் நிறுத்தத்தை உறுதி செய்வதையும், பிணைக் கைதிகளை விடுவிப்பதற்கான ஒப்பந்தத்தையும் நோக்கமாகக் கொண்ட ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் இடையேயான மறைமுக பேச்சுவார்த்தைகள் கடந்த வாரம் முடிவின்றி இடைநிறுத்தப் பட்டன.

இந்தநிலையில், இஸ்ரேலால் இராணுவ ரீதியாக பாதிக்கப்பட்ட ஹமாஸ் அமைப்பு, ஜெருசலேமை தலைநகராகக் கொண்ட சுதந்திரமான, முழு இறையாண்மை கொண்ட பாலஸ்தீன அரசு நிறுவப்படும் வரை ஆயுதங்களை கைவிடமுடியாது என்று தெரிவித்துள்ளது.

மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான எந்தவொரு ஒப்பந்தத்திற்கும் ஹமாஸை நிராயுதபாணியாக்குவதை இஸ்ரேல் ஒரு முக்கிய நிபந்தனையாக கூறி வரும் நிலையில், ஹமாஸ் தமது அறிவிப்பை வெளியிட்டுள்ளது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள் சட்டமூலத்திற்கு முழுமையான ஆதரவு

### எதிர்க்கட்சி எம்.பி அறிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப் புரிமைகள் மற்றும் சலுகைகள் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கு எதிர்க்கட்சி என்ற ரீதியில் முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்.ஓய்வு பெற்ற ஜனாதிபதிகளின் சிறப் புரிமைகள் மற்றும் சலுகைகள் தொடர்பில் முன் வைக்கப்பட்டுள்ள சட்டமூலம் தொடர்பில் தற்போது பரவலாகப் பேசப் படுகிறது.

தர்மத்தின் அடிப்படையில் இந்த சட்டமூலம் சரியானது. ஓய்வு பெற்ற ஜனாதிபதிகளுக்கு அரச செலவில் வாழ்நாள் முழுவதும் சலுகைகள் வழங்கப்படுவது சமூகத்தில் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது.

நாட்டை விட்டு தப்பிச் சென்ற கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இந்த சிறப்பு ரிமைகளும். சலுகைகளும் கிடைக் கின்றன.எனவே இவ்வாறானவர்களுக்கான சலுகைகளை நீக்குவதற்கு நிச்சயம் சட்டம் அறிமுகப் படுத்தப்பட வேண்டும். ஆனால் அனைத்து முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் முறையான பாதுகாப்பை வழங்கவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என அவர் தெரிவித்தார். (நி)

## வல்வைப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு

(கரணவாய்)



வல்வைப் படுகொலை 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 4 மணியளவில் தமிழ்த் தேசிய பேரவையினரால் முன்னெடுக் கப்பட்டது.

1989 ஆம் ஆண்டு இதே நாளில் இந்திய இராணுவத்தினரால் கொன்று குவிக்கப்பட்ட தமிழர்களின் நினைவாக வல்வெட்டித்துறை றேவடி கடற்கரை பகுதியில் குறித்த நினைவேந்தல் முன்னெடுக்கப்பட் டது. (8-60)


## யாழ் முஸ்லிம் சமூக ஜோதி விருது-2024











யாழ் முஸ்லிம் சமூக ஊடகம்– கலாபூஷணம் பரீட் இக்பால் ஏற்பாட்டில் "யாழ் முஸ்லிம் சமூக ஜோதி" விருது 2024 ஆம் ஆண்டுக்கு எம்.ஏ.சி.ஏ.ஸலாம், மஹ்றூப் ஏ.காதர், அபூபக்கர் சுல்தான், கவிஞர் யாழ் அஸீம், எம்.எம்.முனாஸ். ஆகிய ஐவருக்கும் வழங்கப்பட்டது.

யாழ் முஸ்லிம் சமூக ஜோதி விருதுக்கு எஸ்.எம்.மீரான் ஸாஹிப் பௌண்டேஷன் சார்பாக எம்.எஸ்.ஜாபிர் அனுசரணை வழங்கினார். (சி-3336)


## இன்று ஒரு தகவல் 422

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## ஒளி வீசும் மரங்கள்

அப்பப்பா.. இந்த இருட்டிலே உங்க தெருவை தேடிக் கண்டு பிடிப்பதற்குள்ளே போதும் போதும் என்று ஆகிவிட்டது சார் என்றார் ஒருவர்.தெருவைக் கண்டு பிடிப்பதே கஷ்டமாய் போய்விட்டதா? என்று கேட்டார் இன்னொருவர்.ஆம், தெருவிளக்கு ஒன்று கூட சரியாக எரியவில்லை கடைசியிலே அந்த முனையிலே இருந்த ஒரு வேப்பமரம் தான் இந்தத் தெருவை எனக்கு அடையாளம் காட்டியது என்றார். கொஞ்சம் பொறுங்கள் இன்னும் கொஞ்ச காலத்திலே தெருவிளக்கு தேவையிருக்காது போல உள்ளது. ஏனென்றால் மரங்களையே தெருவிளக்காக உபயோகப்படுத்தலாம் என்று யோசித்துக் கொண்டிருக் கிறார்கள் என்றார்.

அது எப்படி முடியும்? அது ஒரு புதுவிதமான ஆராய்ச்சி.மின்மினிப் பூச்சி உடம்பிலே வெளிச்சத்தை உண்டாக்கும் இரசாயனப் பொருள் இருக்கிறது அல்லவா? அதை பிரித்து எடுத்து தாவரங்களுக்குக் கொடுக்கிற ஆராய்ச்சி.இப்படி கொடுத்தால் ஒளி வீசுகின்ற தாவரங்களை உண்டாக்க முடியும். இது ஏதோ முடியாத காரியம் என்று நினைக்கவேண்டாம். ஏற்கனவே புகையிலைச் செடியிலே இவை மாதிரி செய்து அதை ஒளி வீசுகிற மாதிரி செய்துவிட்டார்கள்.மின்மினிப் பூச்சி உடம்பிலே சுரப்பது இரண்டு இரசாயன பொருள்.ஒன்று லூசிபெரின் இன்னொன்று லூசிபெரேஸ்.இதிலே லூசிபெரின் கிரியா ஊக்கியாக பயன் படுகிறது.மின்மினிப்பூச்சிகள் அருகில் இருக்கின்ற இந்த இரண்டு இரசாயனபொருட்களையும் பிரிச்சு எடுத்து புகையிலைச் செடியிலே கொடுத்தார்கள்.அது ஒளிவீச ஆரம்பித்தவிட்டது.

சில நோய்கள் கண்டுபிடிக்க நோய்க்கிருமிகள் உடம்பிலே அல்லது நோயை ஏற்படுத்துகின்ற பொருட்களிலே கதிரியக்கத்தை ஏற்றிவிடுவார்கள் அதன்பின் கதிரியக்கம் அறிகிற கருவி பயன்படுத்தி எந்த இடத்திலே எந்த அளவிற்கு நோய் இருக்கிறது என்பதை கண்டுபிடிப்பார்கள்.

ஆனால் இது மாதிரி செய்யும் போது சின்ன அளவு கதிரியக்கம் கூட சில சிக்கலை ஏற்படுத்தி விடும். இனிமேல் கதிரியக்க ஐசோடோப்பிற்கு பதிலாக மின்மினிப்பூச்சி உடம்பிலே உள்ள லூசிபெரினை உபயோகப்படுத்தலாம்.

நோயாளியின் ரத்தத்திலே லூசிபெரினை கலந்து விட வேண்டியது. நோயின் தன்மையை ஒளிமூலமாக கண்டுபிடித்துகொள்ளலாம். அமெரிக்காவிலேயும் பிரான்சிலேயும் இப்போது அப்படித்தான் செய்கின்றனர்.

மரபியல் சம்பந்தமான ஆராய்ச்சியில் மனிதன் எவ்வளவோ முன்னேறியிருக்கிறான்.தாவரங்களின் மரபணுக்களைப் பிரித்து லூசிபெரின் உற்பத்தி செயகின்ற அம்சத்தை உட்செலுத்த முடியும் என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். இவை மாதிரி செய்து சாலைகளிலே இரண்டு பக்கமும் ஒளி வீசுகின்ற மரங்களை நட்டுவைத்தால் மின்சார விளக்கை நம்பவேண்டிய அவசியமில்லாமல் போயிடும்.இல்லையா?

ஆகக்கூடியது மரங்களையே விளக்கா உபயோகப்படுத்த கூடிய காலம் வந்துகொண்டிருக்கிறது. இப்பவே சில இடங்களிலே , பூச்சிகளை விளக்காக உபயோகப்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். மத்திய அமெரிக்க நாடுகளிலே ஒருவிதமான வண்டுகள் உண்டு.நான்கு செ.மீற்றர் நீளம் வரைக்கும் வளரும்.

இவற்றைப் பிடித்து கம்பிவலையாலே ஆன டப்பாக்களிலே அடைத்து வைத்துக்கொள்வார்அவை வெளியிடுகின்ற வெளிச்சத்திலே புத்தகம் கூட படிக்க முடியுமாம். சில பறவைகள் மின்மினிப்பூச்சிகளைப் பிடித்துக்கொண்டு போய் கூட்டிலே வெளிச்சத்துக்காக வைத்திருக்கும்.

நம்மில் சில பேருக்கு தூக்கத்துலே நடக்கிற வியாதி உண்டு. அவர்கள் உடம்பிலேலூசிபெரினை சேர்த்து விட்டால்இருட்டிலே எழுந்து எங்கே போறார்கள் என்பதை கண்டுபிடித்திடலாம்!

அதுமாதிரி ஆசாமி ஒருத்தர் சொன்னார்.சார் எனக்குத்தூக்கத்துலே நடக்கிற வியாதி உண்டு. அடிக்கடி எழுத்திரிச்சுப் போய் எதிர் வீட்டு திண்ணையிலே படுத்துவிடுவேன் சார். நேற்று அப்படித்தான் போய் படுத்தேன். திரும்பி வரும்போது அங்கே படுத்திருந்தவர் பக்கத்திலே இருந்த பாட்டரி லைற்றை தவறுதலாக எடுத்துக் கொண்டு வந்துட்டேன் சார். இருந்தாலும் எங்களுக்குள்ள மனஸ்தாபம் வரவில்லை சேர். அவரும் அதை தப்பாக நினைக்கவில்லை என்றார்.

"ஏன் என்று கேட்டேன்.

"ஏன்னா அந்த எதிர்வீட்டுக்காரருக்கும் தூக்கத்துலே நடக்கற வியாதி உண்டு. முந்தினநாள் அவர் எங்க வீட்டுலேயிருந்து எடுத்துக்கிட்டுப் போன பாட்டரி லைட்தான்சார் அது!" அப்படின்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகஸ்ட் மாத இராசி பலன்கள்

## காரிய அனுகூலம் உண்டாகும்!



**கிரகநிலை** - இராசியில் கேது - தனவாக்கு குடும்ப ஸ்தானத்தில் சந்திரன், செவ்வாய் - களத்திர ஸ்தானத்தில் சனி (வ), ராகு - லாப ஸ்தானத்தில் புதன், குரு, சுக்கிரன் - அயன சயன போக ஸ்தானத்தில் சூரியன் என கிரக நிலைகள் உள்ளன.

**கிரகமாற்றம்:** 03.08. 2025 அன்று லாப ஸ்தானத்தில் இருந்து புதன் அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார்; 17.08.2025 அன்று அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து சூரியன் இராசிக்கு மாறுகிறார்; 21.08.2025 அன்று சுக்கிரன் லாப ஸ்தானத்தில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார்; 25.08.2025 அன்று அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து புதன் இராசிக்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். அடுத்தவர்களுக்கு உதவுவதில் ஆர்வம் காட்டுவீர்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். செலவுகள் ஏற்படும். கோபத்தால் சில்லறை சண்டைகள் ஏற்படலாம். பணவரத்து கூடும். காரிய அனுகூலம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். விற்பனை அதிகரிக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் புத்தி சாதுரியத்தால் வேலைகளை திறமையாக செய்து முடித்து பாராட்டு பெறுவீர்கள். பதவி உயர்வு கிடைக்கலாம். குடும்பத்தில் நிம்மதி காணப்படும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். குழந்தைகளின் செயல்களால் பெருமை அடைவீர்கள்.

**பெண்களுக்கு:** உதவி கேட்டு உங்களை நாடி வருபவர்களுக்கு தேவையான உதவிகளை செய்வீர்கள். அரசியல்வாதிகள் நட்புகளை பகைத்துக் கொள்ள வேண்டாம். கலைத்துறையினரின் மதிப்பு, மரியாதை கூடும்.




மாணவர்களுக்கு சக மாணவர்களுடன் கவனமாக பழகுவது நல்லது.

**மகம்:** இந்த மாதம் விடாமுயற்சியும், கடினமான உழைப்புமே உங்களை முன்னேற்றும் என்பதில் நம்பிக்கை வையுங்கள். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சனைகள் மறையும். நீங்கள் எதைச் செய்தாலும் அதில் முழு கவனத்துடனும் செய்யுங்கள்.

**பூரம்:** இந்த மாதம் வெற்றிகள் கிட்டும். குடும்பத்தில் பிரச்சனைகள் வரலாம். ஊர் சுற்றுவதை குறைத்துக் கொள்ள வேண்டியது அவசியம். ஒப்பனையாளர்கள், சண்டைப் பயிற்சியாளர்கள் மற்றும் துணை நடிகர்கள் ஏற்றம் காண்பார்கள்.

**உத்திரம் 1 ஆம் பாதம்:** இந்த மாதம் உங்கள் பொருட்கள் திருட்டு போகலாம். கவனமுடன் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளுங்கள். புதிய ஒப்பந்தம் மூலம் சிறப்பான வளர்ச்சி காண்பீர்கள்.

புகழும், விருதுகளும் கிடைக்கும். எழுத்து பணியில் இருப்பவர்கள் சளைக்காமல் பணியைச் செய்யவும். வீண் அலைச்சலும், அதன் மூலம் மனமும் உடலும் சோர்வடையலாம்.

**பரிகாரம்:** தினமும் சூரிய நமஸ்காரம் செய்து சிவனை வணங்க பிரச்சனைகள் குறையும். காரிய வெற்றி உண்டாகும்.

**சந்திராஷ்டம தினங்கள்:** ஆகஸ்ட் 13, 14 .

**அதிர்ஷ்ட தினங்கள்:** ஆகஸ்ட் 21, 22.

## எதிர்பார்த்த பண உதவிகள் கிடைக்கும்!



**கன்னி: கிரகநிலை** - இராசி ஸ்தானத்தில் சந்திரன், செவ்வாய் - ரண ருண ரோக ஸ்தானத்தில் சனி (வ), ராகு - தொழில் ஸ்தானத்தில் புதன், குரு, சுக்கிரன் - லாப ஸ்தானத்தில் சூரியன் - அயன சயன போக ஸ்தானத்தில் கேது என கிரக நிலைகள் உள்ளன.

**கிரகமாற்றம்:** 03.08.2025 அன்று தொழில் ஸ்தானத்தில் இருந்து புதன் லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார்; 17.08.2025 அன்று லாப ஸ்தானத்தில் இருந்து சூரியன் அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார்; 21.08.2025 அன்று சுக்கிரன் தொழில் ஸ்தானத்தில் இருந்து லாபஸ்தானத்திற்கு மாறுகிறார்; 25.08.2025 அன்று லாப ஸ்தானத்தில் இருந்து புதன் அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் தேவையான உதவிகள் கிடைக்கும். எதிர்பார்த்த தகவல்கள் நல்ல தகவலாக வரும். விருப்பங்கள் கைகூடும். நண்பர்கள் மத்தியில் மரியாதையும், அந்தஸ்தும் உயரும். மற்றவர்களிடம் பேசும்போது கோபத்தை குறைத்து பேசுவது நல்லது. பணவரத்து இருக்கும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு வெற்றி பெறுவார்கள். குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி கூடும். உங்கள் சொல்படி பிள்ளைகள் நடந்து கொள்வது மனதுக்கு இதமளிக்கும். பிரிந்து சென்றவர்கள் மீண்டும் உங்களை நாடி வருவார்கள்.

**பெண்களுக்கு:** நிதானமாக பேசுவது நன்மை தரும். அரசியல்வாதிகள் தேவையற்ற விடயங்களில் சற்று ஒதுங்கி இருப்பது நல்லது. கலைத்துறையினர் ஆதாயமடைவர். மாணவர்களுக்கு சக மாணவர்களுடன் பழகும் போது கவனம் தேவை.




**உத்திரம் 2, 3, 4 பாதங்கள்:** இந்த மாதம் தொழில் தொடங்குவதற்கு சரியான ஆலோசனை செய்யவும். வாழ்க்கைத் துணையின் பெயரையும் சேர்த்தே புதிய தொழில் தொடங்க வேண்டும். வாகனம் சேர்க்கை சேரும். செய்யும் தொழிலில் அலைச்சல் அதிகமாக இருக்கும். எந்த தொழிலானாலும் நீங்களே நேரிடையாக செயற்படுவது நல்லது. புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும்.

**அஸ்தம்:** இந்த மாதம் அறிமுகம் இல்லாதவர்களிடம் வரவு, செலவு வைத்துக் கொள்ள வேண்டாம். பழைய பாக்கி வசூல் ஆகும். வேறு பல உபதொழில்களும் இந்த நேரத்தில் ஆரம்பிக்கலாம். உடன் பிறந்தவர்களால் உதவிகள் வந்து சேரும். முயற்சிகளுக்குத் தகுந்த லாபம் கிடைக்கும்.

**சித்திரை 1, 2, பாதங்கள்:** இந்த மாதம் கொடுக்கல், வாங்கலில் இருந்த சிரமங்கள் குறையும். தடைகள் ஏற்பட்டாலும் இறுதியில் அனைத்துச் செயல்களிலும் வெற்றியடைவீர்கள். வாடிக்கையாளர்களைக் கவர, புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்தினாலும் கடன் சுமை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளவும். கூட்டாளிகளிடம் விட்டுக் கொடுத்து நடந்து கொள்ளவும்.

**பரிகாரம்:** கிருஷ்ண பரமாத்மாவை வணங்க கஷ்டங்கள் தீரும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்

**சந்திராஷ்டம தினங்கள்:** ஆகஸ்ட் 15, 16 .

**அதிர்ஷ்ட தினங்கள்:** ஆகஸ்ட் 23, 24, 25

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின்

பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

836





## 19 ஆம் அத்தியாயம்
## சிரிப்பும் நெருப்பும்

பூங்குழலி தன்னைப் படகுடன் சேர்த்துக் கட்டியிருந்த கட்டுகளை அவிழ்க்க அவசர அவசரமாக முயன்றாள். அது அவ்வளவு இலகுவான காரியமாக இல்லை. சண்டாளப் பாவிகள்! கயிற்றைத் தாறுமாறாக விட்டு முடிச்சுக்கு மேல் முடிச்சாகப் போட்டிருந்தார்கள். பூங்குழலியின் சிறிய கத்தி படகின் அடியில் கிடந்தது. ஒரு கரத்துக்காவது விடுதலை கிடைத்தால் கத்தியை எடுத்துக் கட்டுக்களை அறுத்து எறியலாம். ஆனால் பாவிகள் மணிக்கட்டுகளைச் சேர்த்துத்தான் பலமாகப் பின் புறத்தில் கட்டியிருந்தார்கள். பூங்குழலி மிகவும் கஷ்ரப்பட்டுக் குனிந்து பற்களினால் கத்தியின் பிடியைக் கவ்வி எடுத்துக் கொண்டாள்.

பற்களினால் கவ்விய வண்ணமே கத்தியைப் பிடித்துக் கொண்டு கயிற்றை ஓரிடத்தில் அறுத்தாள். கைகளின் கட்டுச் சிறிது தளர்ந்தது. ஒரு கையை மிகவும் பிரயாசையின் பேரில் கட்டிலிருந்து விடுதலை செய்து கொண்டாள். பிறகு கயிறுகளை அறுப்பது சிறிது எளிதாயிற்று.

கட்டுகளிலிருந்து முழுதும் விடுவித்துக் கொள்வதற்கு ஏறக்குறைய ஒரு நாழிகை நேரம் ஆகி விட்டது. இந்தச் சமயத்தில் ஓடைக்கரை மீது காலடிச் சத்தம் கேட்டது. பிறகு ஒரு நிழல் தெரிந்தது. தன்னைக் கட்டிப் போட்டவர்களில் ஒருவன்தான் திரும்பி வருகிறான் போலும்! அல்லது தான் கட்டுகளை அவிழ்த்துக் கொண்டு தப்பிவிடாமல் பார்த்துக் கொள்வதற்காக ஒருவனைப் பின்னால் விட்டு வைத்துச் சென்றிருக்கிறார்கள் போலும்! அவன் தன் கண் முன்னால் தெரிந்ததும் கையிலிருந்து கத்தியை அவன் மீது எறிந்து கொன்று விடுவது என்று பூங்குழலி தீர்மானித்துக் கொண்டு அதற்கு ஆயத்தமாகக் கத்தியைப் பிடித்துக் கொண்டிருந்தாள். ஆனால் எத்தகைய ஏமாற்றம்?

"பூங்குழலி! பூங்குழலி!" என்று சேந்தன் அமுதனுடைய குரல் கேட்டது.

அடுத்த வினாடி அமுதனுடைய பயப் பிராந்தியுற்ற முகம் ஓடைக் கரையின் மேலிருந்து எட்டிப் பார்த்தது. பூங்குழலி கத்தியை இடுப்பில் செருகிக் கொண்டாள். அமுதனும் அவளைப் பார்த்துவிட்டான்.

"பூங்குழலி! நீ உயிரோடு இருக்கிறாயா?" என்று சொல்லிக் கொண்டே பாய்ந்து ஓடி வந்தான்.

"நான் உயிரோடிருப்பது உனக்கு கஷ்டமாயிருக்கிறதாக்கும்! வேண்டுமானால் உன் கையாலேயே கொன்றுவிட்டுப் போய்விடு! ஆனால் அவ்வளவு தைரியம் உனக்கு எங்கிருந்து வரப்போகிறது?" என்றாள் பூங்குழலி.

"சிவ! சிவா! எவ்வளவு கொடூரமான வார்த்தைகளைக் கூறுகிறாய்? நான் எதற்காக உன்னைக் கொல்லப் போகிறேன்? நீ தான் உன் வார்த்தைகளினால் என்னைக் கொல்லுகிறாய்!" என்றான் அமுதன்.

"பின்னே, சற்று முன்னாலேயே ஏன் வந்திருக்கக் கூடாது? கட்டுக்களை நானாக அறுத்து விடுவித்துக் கொள்ளுவதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டுப் போனேன், தெரியுமா?" என்று சொல்லிக் கொண்டே பூங்குழலி எழுந்து நிற்க முயன்றாள்.

(தொடரும்...)

---

நல்லூரா! மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்
அலங்காரா! விண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்
எண்ணில் நல்லகதிக்கு யாதும் ஓர் குறைவிலை

**பிட்டுக்கு மண் சுமந்தார் நம் அப்பன்**
**சிவன் செம்மணச் செல்விக்காக**
**இங்கு அங்கப்பிரதட்சணம் செய்யும் அடியவர்களுக்கு**
**மண் சிவம் சிவம் ஓம் முருகா**
**எப்பதான் நம் இனம் விடுதலைதான் அலங்காரா**

சிவவாக்கியர் சித்தர் பாடல்–புரட்சி 453
**அல்லதில்லை என்று தான் ஆவியும் பொருளுடல்**
**நல்ல ஈசர் தாள் இணைக்கும் நாதனுக்கு ஈந்திலை**
**என்றும் என்னுள் நேசமும் வாசியை வருத்தினால்**
**தொல்லையாம் வினை விடென்று தூரதூரம் ஆனதே.**

**நல்லை "நல்ல ஈசர் தான் இணைக்கும் நாதனுக்கும் ஈதிலை" மண்ணுலகத்தரும்,** விண்ணுலகத்தரும் போற்றி துதிக்கும் "அலங்காரா! நல்லூரா! உன் திருவடி இணைக்கும்" **அங்கப்பிரதட்சணம் செய்யும் அடியார்களுக்கு யோகர் சுவாமிகள்** புகழ்தந்த அருள்மிகு **திருவீதிக்கு மணல் இல்லையா?** எம்பெருமானே" ஓம் முருகா"

"சித்தர் மூன்றாவது வரி" என்றும் என்னுள் நேசமும் வாசியை வருந்தினால்" இறுதிவரியில் "தொல்லையாம் வினை விடென்று தூரதூரம் ஆனதே."

477 வது பாட்டு சித்தனை அறிந்து நோக்க வல்லிரேல்

**புத்தகங்களைச் சுமந்து பொய்களைப்பிதற்றுவீர்**
**செத்திடம் பிறந்திடம் அது எங்கள் என்று அறிகிலீர்**
**அத்தனைய சித்தனை அறிந்து நோக்க வல்லிரேல்**
**உத்தமத் துள் ஆயசோதி உணரும் போகம் ஆகுமே.**

**யோகர்சித்தர், செல்லப்பா சித்தர் நல்லூர் திருவீதியின் பெருமையை நோக்காமலும் அறிவு நூல்களை மறந்து " புத்தகங்களைச் சுமந்து பொய்களைப் பிதற்றுவீர்"** எனவும் செத்திடம் பிறந்திடம் அது எங்கள் என்று அறிகிறீர் **"ஓம் அலங்காரா நல்லூரா" உள்ளத்தில் சோதி உணரலாம்.**

சித்தர் பாடல்- 509- அறம் இலாத பாவிகட்க்கு பரம் இலாத சூன்யமாகும் பாழ் நரகம் ஆகுமே.

**பரம் இலாதது எவ்விடம்? பரம் இருப்பது எவ்விடம்?**
**அறம் இலாத பாவிகட்குப் பரம் இலை இது உண்மையே உண்மையே;**
**கரம் இருந்தும் பொருளிருந்தும் அருளிலாத போதது**
**பரம் இலாத சூன்யமாகும் பாழ் நரகம் ஆகுமே.**

உலக நாடு பூராகவும் அலையாக வந்து
அலங்காரா! நல்லூரா என எல்லோரும்
அடியவர்கள் பரவசமாகும் அருள் மிக ஆலயமாகும்.

436 வது சிவவாக்கியர் பாடல்– நம் உடலில் இருப்பனே

**திண்ணம் என்றுசேதி சொன்ன செவ்வியோர்கள் கேண்மினோ**
**அண்ணல் அன்பு என்புருகி அறிந்து நோக்கலாயிடும்**
**மண்ணதிர விண்ணதிர வாசியை நடத்திடில்**
**நண்ணி எங்கள் ஈசனும் நமதுடலில் இருப்பனே.**

இது சித்தர் வாக்த மண்ணதிர விண்ணதிர
இறைவன் நல்லூரா! அலங்காரா நடத்திடில்
நண்ணி எங்கள் ஈசனும் நமதுடலில்
இருப்பனே – அன்பே– சிவம்


**ஆன நெஞ்சமே!! இமைப்பொழு தாகிலும் அலைவறுத்திருந்தாயோ?**
**போன நாளிலே நடந்தது மிருந்ததும் புதுமைகளறியாயோ?**
**ஈனமாகிய கவலையை நீக்கியைப் பொறியினி லிணங்காமல்**
**தான மொத்து நான் சொல் மொழி கேட்டு நீசரியென்று மகிழ்வாயே**

03.08.2025 ஆடிப்பெருக்கு திருநெல்வேலி சாயி முருக பக்தர்கள் ஆலயத்தில் ஆயிரம் அடியார்கள் முருகன் நாம பஜனை மண்ணும் விண்ணும் அதிர ஓதினார்கள். ஆடிப் பெருக்கு ஆடி 18 ஆம் நாள் இந்தியாவில் சிறப்பு, அறியலாம். இங்கு நல்லூர் ஆலயத்தில் பாடியது எல்லாம் **அலங்காரப் பிரியன் செயல் எனலாம்.**

**ஆலயத்தில் ஆசார சீலராகவும் முன்னோர்கள் காட்டிய வழியில் நூல் ஆடை அணிந்து நெற்றியில் திருநீறு பரவி அணிந்து தலை மயிர் வாரி இழுத்து முடிந்து ஆலயத்தில் துப்பரவைப் பேணி திருமுறைகள் ஓதி பக்தனாகி வணங்குவோம்.**

**அலங்காரா எங்கள் தமிழ் தெய்வம் முருகனை பணிவோம் எல்லா நலனும் பெற்று உய்ந்து சைவ நெறியில் வாழ்வோம்.**

**க.கு.க சிவபாலன், போசகர்,**
**ஈழத்துச் சிதம்பரம், மாணிக்கவாசகர் மடாலயம்.**
**பாஞ்சசன்யம்.**



(சி-3564)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகில் காண விரும்பும் மாற்றமாக நீங்களே இருங்கள். ~ மகாத்மா காந்தி

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## பாடசாலைகளுக்கு மூடுவிழாச் செய்து சமூகத்துக்கு துரோகம் இழைக்காதீர்கள்

வட மாகாணத்தில் 70க்கும் மேற்பட்ட பாடசாலைகள் மூடப்பட வேண்டிய நிலையில் இருப்பதாக கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

வட மாகாணப் பாடசாலைகளின் நிலைவரம் குறித்து அவர் வெளியிட்ட தரவுகளின் அடிப்படையில், மாணவர்கள் இல்லாத அல்லது மிகக் குறைந்த மாணவர்களைக் கொண்டிருப்பதன் காரணத்தால் வட மாகாணத்தில் 70க்கும் அதிகமான பாடசாலைகள் மூடப்பட வேண்டி இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

அதேநேரம் யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் (02) வருகை தந்த பிரதமர் ஹரிணி, கல்விச் சீர்திருத்தம் தொடர்பில் புத்திஜீவிகளுடன் நடத்திய கலந்துரையாடலின்போது, மிகக் குறைந்த மாணவர்கள் கற்கின்ற பாடசாலைகள் தொடர்பான புள்ளி விபரங்களை வெளிப்படுத்தியுள்ளார்.

நல்லது கல்விச் சீர்திருத்தம் தேவை என்பதில் மாற்றுக்கருத்திருக்க முடியாது.

அதேநேரம் கல்விச்சீர்திருத்தம் என்பது மாணவர்கள் இல்லாத அல்லது குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை மூடுவதாகவும் இருக்கக்கூடாது.

அதாவது, குறைந்தளவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் பற்றிய தரவுகளை வெளியிட்ட பிரதமர் ஹரிணி, அதிகளவான மாணவர்களை உள்வாங்கியிருக்கக் கூடிய பாடசாலைகளின் விபரங்களையும் தெரிவித்திருக்க வேண்டும்.

அவ்வாறான தரவுகளைத் தெரியப்படுத்தும் போதுதான், ஒன்றோடு ஒன்று முரண்பட்டுள்ள நிலைமையை எவ்வாறு சீராக்கம் செய்வது என்ற தீர்மானத்துக்கு வரமுடியும்.

ஆம், மாணவர்கள் குறைவாக உள்ள பாடசாலைகளை மட்டும் தூக்கிப் பிடிப்பதில் எந்தப் பிரயோசனமும் இல்லை. மாறாக, குறித்த ஒரு பாடசாலை தனது இயலளவைக் கடந்து மாண வர்களை உள்ளீர்ப்புச் செய்திருப்பதன் காரண மாக, அதற்கு அயலில் உள்ள ஏனைய பாட சாலைகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன.

ஆம், அதிக மாணவர்களை உள்வாங்குகின்ற பாடசாலைகளில் ஒரு வகுப்பறையில் 50 மாணவர்கள் கற்கின்றபோது, அதற்கு அயலில் உள்ள ஒரு பாடசாலையின் வகுப்பறையில் 5 மாணவர்கள் இருக்கின்றனர். இங்குதான் இரண்டு பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர்.

அதாவது அதிக மாணவர்களைக் கொண்ட வகுப்பறையில் ஆசிரியர்களால் கற்பிக்க முடிவதில்லை. அதேநேரம் மிகக்குறைந்த மாணவர்கள் இருப்பதால் அங்கு கற்பிப்பதற்கு ஆசிரியர்களுக்கு விருப்பம் இருப்பதில்லை.

எனவே அதிக மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் இருந்து மாணவர்களைப் பிரித்து அயலில் உள்ள பாடசாலைகளில் இணைக்கின்றபோது இரண்டு பாடசாலைகளும் உச்சமாக இயங்க முடியும்.

ஆக, மாணவர்கள் போதுமாக இல்லை என்ற குறைபாட்டை முன்வைத்துப் பாடசாலைகளுக்கு மூடுவிழாச் செய்யாமல், அதிக மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளுடன் குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை இணைப்புச் செய்ய வேண்டும்.

இதன்மூலம் அனைத்துப் பாடசாலைகளிலும் மாணவர்கள் நிறைந்திருப்பர்.

அத்தோடு பிரபலமான பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகளைச் சேர்க்க வேண்டும் என்ற பெற்றோர்களின் நியாயமான ஆசையும் நிறைவேற்றப்படும்.

### சர்வதேச விசாரணையை வலியுறுத்த

# சோமரத்ன கூறிய கருத்துக்கள் எமக்குச் சாதகமாகவுள்ளன

### காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம்

(கொழும்பு)

லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவின் கருத்து தமக்குச் சாதகமாக இருப்பதாகத் தெரிவித்துள்ள வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்படுவதற்கு அவசியமான அழுத்தத்தை வழங்குவதற்கு பாதிக்கப்பட்ட தரப்பினர், தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகள், சிவில் சமூகம், புலம்பெயர் தமிழர்கள் என சகல தரப்பினரும் இச்சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

யாழ்.செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்று முன்னெடுக்கப்படும் பட்சத்தில் அதில் சாட்சியமளிப்பதற்குத் தயாராக இருப்பதாக கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ தெரிவித்திருப்பதாகக் குறிப்பிட்டு அவரது மனைவி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அத்தோடு யுத்தகாலத்தில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற படுகொலைகள் மற்றும் அங்கு நடாத்தப்பட்டுவந்த சித்திரவதைக்கூடங்கள் என்பன பற்றிய விபரங்களை வெளியிடுவதற்குத் தனது கணவர் தயாராக இருப்பதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் சோமரத்ன ராஜபக்ஷவின் வெளிப்படுத்தல்கள் தமக்கு அதிஷ்டலாபச்சீட்டு விழுந்ததைப்போன்று இருப்பதாகவும் இச்சந்தர்ப்பத்தை நீதிகோரிப்போராடும் சகல தரப்பினரும் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் ஆ.லீலாதேவி தெரிவித்தார். (ந-7)

## கந்தளாயில் நெற்பயிர்களுக்கு விசம் தெளித்த விசமிகள்

(திருகோணமலை)

கந்தளாய், போட்டாங்காட்டுப் பகுதியில் அறுவடைக்குத் தயாராக இருந்த ஐந்து ஏக்கர் நெற்பயிர்கள் மீது இனம் தெரியாதோரால் களைகொல்லி விசம் தெளிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கந்தளாய் பொலிஸ் நிலையத்திலும் விவசாயத் திணைக்களத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை, தம்பலகாமம் ஆதி கோணநாயகர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான இந்த வயல் நிலத்தை சிறுபோக நெற்செய்கைக்காக விவசாயி ஒருவர் குத்தகைக்கு எடுத்துப் பயிர்செய்து வந்த நிலையிலேயே இந்த நாசகாரச் செயல் அரங்கேறியுள்ளது.

தம்பலகாமம் ஆதி கோணநாயகர் தேவஸ்தானத்திற்குரிய இந்த வயல் கடந்த காலங்களில் கோவிலுக்குத் தொண்டாற்றும் அடியார்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிலையில், குறித்த விவசாயி இம்முறை சிறுபோகத்திற்காக இதைக் குத்தகைக்கு எடுத்து நெற்செய்கையில் ஈடுபட்டதாகத் தெரியவருகிறது. (ந-7)

## மூதூரில் வீடொன்றில் தங்கியிருந்த 19 சந்தேக நபர்கள் கைது

### கூரிய ஆயுதங்கள், போதைவஸ்து மீட்பு

(மூதூர்)

சந்தேகத்திற்கிடமான முறையில் வீடொன்றில் தங்கியிருந்த 19 சந்தேக நபர்கள் மூதூர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அங்கிருந்து கூரிய வாள்கள், ஐஸ் போதைப் பொருள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகத்திற்கிடமான முறையில் மூதூர் பொலிஸ் பிரிவிலுள்ள தோப்பூர் பிரதேசத்தில் ஒரு குழுவினர் ஒன்றுகூடுவதாக மூதூர் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்ததை அடுத்து மூதூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் ஆலோசனைக்கமைவாக பொலிஸ் குழுவினர் குறித்த வீட்டினை முற்றுகையிட்டனர்.

இதன்போது குறித்த 19 பேர் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து 4 கூரிய வாள்கள், 2520 மில்லிகிராம், 2300 மில்லிகிராம் நிறையுடைய இரண்டு ஐஸ் போதைப்பொருள் என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஈச்சிலம்பற்று, தோப்பூர், மூதூர், பச்சநூர் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் தற்போது மூதூர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதுடன் இவர்களை மூதூர் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் மூதூர் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ந-7)

## மருத்துவர்களது இடமாற்றங்கள் முறையாக இடம்பெறவில்லை

### சாடுகிறது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

சுகாதார அமைச்சின் நடவடிக்கைகள் காரணமாக நாட்டில் 23 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவர்களின் இடமாற்றங்களில் சிக்கல்கள் எழுந்துள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் விசனம் தெரிவித்துள்ளது.

மருத்துவர்களின் வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பாகப் பல கடுமையான சிக்கல்கள் எழுந்துள்ளதாகவும் இதனால் சுகாதார அமைப்பில் தேவையற்ற சிக்கல் உருவாக்கப்படுவதாகவும் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

இந்த இடமாற்ற நடைமுறைகள் நிறுவன குறியீட்டில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாக கூறிய மருத்துவர் சமில் விஜேசிங்க சுகாதார அமைச்சின் மருத்துவ சேவைகள் பிரிவின் தன்னிச்சையான செயற்பாடுகள் காரணமாக இந்தச் சிக்கல்கள் இப்போது எழுந்துள்ளன.

இதன் விளைவாக நாட்டில் சுமார் 23 ஆயிரம் மருத்துவர்களின் இடமாற்றங்கள் தொடர்பாக சிக்கல்கள் எழுந்துள்ளதுடன் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவர்களின் இடமாற்றங்கள் செயற்படுத்தப்படவில்லை என்றும் குற்றம் சாட்டினார்.

அத்துடன் நாட்டில் சுமார் 50% மருத்துவர்கள் தற்போது அவர்களுக்குரிய வைத்தியசாலைகளில் பணியமர்த்தப்படவில்லை என்றும் மருத்துவர் சமில் விஜேசிங்க மேலும் தெரிவித்தார். (ந-7)

## செல்வநாயகம் காலமானார்

வடமாகாண ஆளுநரின் உதவிச் செயலாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற கே.எக்ஸ் செல்வநாயகம் நேற்று முன்தினம்(02) காலமானார்.

போர்க்காலச் சூழலில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபராக இருந்து சிறந்த சேவையை வழங்கிய இவர், வடமாகாண பிரதித் திட்டப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றிருந்தார்.

அன்னாரின் பூதவுடல் யாழ்ப்பாணம் கோயில் ஒழுங்கையிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. (ந-7)

## திருமலையில் இளைஞன் அடித்துப் படுகொலை

திருகோணமலை மூன்றாம் கட்டைப் பகுதியில் இளைஞரொருவர் அடித்துப்படுகொலை செய்யப்பட்ட சம்பவமொன்று நேற்று (03) இடம்பெற்றுள்ளது.

இதில் திருகோணமலை கிருஷ்ண கோயில் வீதியில் வசித்து வரும் தேனுவர ஹென்றிகே விநோத் எனும் 33 வயதுடைய நபரே உயிரிழந்தவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

முற்பகை காரணமாக இளைஞன் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 28

சொக்கன்

ஆனால் மிக்21 விடயத்தில் அமெரிக்காவின் பாச்சா பலிக்கவில்லை.

ரஷ்யா மிகக் கவனமாக தன்னுடைய தோழமை நாடுகள் முக்கியமாக அமெரிக்காவுடைய விரோதிகளுக்கு மட்டுமே இந்த விமானத்தை விற்பனை செய்தது. அதன் பிறகும் விமானத்தின் பாதுகாப்பு, பராமரிப்பு, ரிப்பேர் பார்ப்பது தொடங்கிய அதற்குப் பெட்ரோல் போடுவது விமானிகளுக்குப் பயிற்சி தருவதுவரை சகலரையும் அவர்களே பார்த்துக் கொண்டார்கள்.

இதனால் அமெரிக்காவுக்கு டென்ஷன் அதிகரித்தது. அந்த மிக்21இல் அப்படி என்னதான் இருக்கிறது என்று தெரிந்துகொள்ளத் துடித்தார்கள். எப்படியாவது ஒரு மிக்21 விமானத்தைக் கடத்திவரவேண்டும். அதைப் பிரித்துப் போட்டுக் குடலாப்ரேஷன் செய்ய வேண்டும். அப்போதுதான் அதைச் சமாளிப்பதற்கு எதிர்த்துத் தாக்குவதற்கான வழிகளைக் கண்டுபிடிக்கமுடியும். அதுவரை அமெரிக்காவுக்கு நிம்மதி கிடையாது.

ஆனால் அமெரிக்க உளவு நிறுவனங்களும் இராணுவமும் எவ்வளவு தான் கஷ்டப்பட்டு முயற்சி செய்தாலும் மிக்21 மட்டும் அவர்களுடைய கைக்குச் சிக்கவில்லை. அடுத்து என்ன செய்வது என்று புரியாமல் திகைத்துப் போயிருந்தார்கள்.

இந்த நேரத்தில்தான் மியர் அமித் மொசாட் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டார். இஸ்ரேலின் முக்கியமான இராணுவ அதிகாரிகள் அலுவலர்களையெல்லாம் நேரில் சந்தித்துப் பேச ஆரம்பித்தார்.

அப்போது இஸ்ரேல் விமானப் படையின் தலைவர் ஜெனரல் மொர்டெசாய் ஹாட் அவர்தான் மய்ர் அமித்துக்கு மிக்21ஐ அறிமுகப்படுத்தினார். நாம இந்த விமானத்தைப்பற்றி இன்னும் விளக்கமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் அதுவும் உடனடியா!




ஏன் ஜெனரல்? இதனால நமக்கு என்ன பிரயோஜனம்?

நம்மைச் சுத்தியிருக்கிற எதிரி நாடுகளெல்லாம் மிக்21 வைத்திருக்கிறார்கள் அவர்கள் திடீர் என்று நம்மீமூ படையெடுத்தா இந்த விமானங்களை எப்படிச் சமாளிக்கிறது? நம்மிடமும் ஒரு மிக்21 இருந்தா அதை யாராவது பார்த்துப் பல விடயங்களைத் தெரிந்து கொள்ளலாம் என்றார் மொர் டெசாய் ஹாட் எப்படியாவது ஒரு மிக் 21 விமானத்தை இஸ்ரேலுக்குக் கடத்திக் கொண்டு வரவேண்டும் அது உங்களால் முடியுமா?

கஷ்டம்தான் அமெரிக்காவே மிக்21 விடயத்தில் செமையாக முழி பிதுங்கிக்கொண்டிருக்கிறது மொசாட்டால் என்ன பெரிதாகச் செய்து விடமுடியும்

ஆனால் மியர் அமித் தன்னுடைய இந்தக் குழப்பத்தை வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. மிக்21 தானே? கண்டிப்பா முயற்சி செய்கின்றேன் என்று மட்டும் சொல்லிவிட்டு வந்தார்.

ஆனால் மொசாட் ஏன் வேலை மெனக்கெட்டு மிக்21ஐக் கடத்த வேண்டும்? இஸ்ரேலிடம் இல்லாத பணமா? ரஷ்யர்களுக்குக் காசு கொடுத்து ஒரு விமானம் வாங்கிப் போட்டால் என்ன?

ம்ஹூம் வாய்ப்பே இல்லை. இஸ்ரேலும் அமெரிக்காவும் கூட்டாளிகள் என்பது உலகத்திற்கே தெரியும். மொசாட் கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்தாலும் ரஷ்யாக்காரர்கள் மனம் இரங்கமாட்டார்கள்.

வேறு வழியே இல்லை விமானத்தைக் கடத்த வேண்டியதுதான்!

உடனடியாக அக்கம் பக்கத்தில் மிக்21 எங்கெல்லாம் இருக்கிறது என்கின்ற புள்ளி விவரத்தைத் திரட்டினார் மியர் அமிர். எகிப்தில் 34, சிரியாவில் 18, ஈராக் கில் 10.

இந்த நாடுகளில் யாராவது ஒரு பைலட்டை விலைக்கு வாங்கமுடியுமா என்று முயற்சி செய்தது மொசாட் அவர்களுக்கு நிறையக் காசு கொடுத்து நைசாக ஒரு மிக்21 விமானத்தை இஸ்ரேலுக்குள் ஓட்டி வந்துவிடலாம் என்று கணக்குப் போட்டார்கள்.

ஆனால் ஒரே பிரச்சினை மிக்21 போன்ற அதிநவீன விமானங்களை எல்லா விமானிகளும் ஓட்டிவிடமுடியாது. அந்தந்த நாட்டு இராணுவத்தின் மிகச் சிறந்த அனுபவம் மிகுந்த ரொம்ப நம்பிக்கையான விமானிகளுக்கு மட்டும்தான் அந்தக் கௌரவம் கிடைக்கும்.

இதுமாதிரி சீனியர் விமானிகளை விலைக்கு வாங்குவது அத்தனை சுலபமில்லை. லஞ்சம் தருகிறேன் விமானத்தைக் கடத்து என்று சொல்லிக்கொண்டு யாராவது வந்தால் உதைத்துத் தோலை உரித்து விடுவார்கள்.

இதனால் மொசாட்டின் ஆரம்பக் கடத்தல் முயற்சிகள் அனைத்தும் படுதோல்வி அடைந்தன. அப்போதும் மியர் அமித் நம்பிக்கை இழக்கவில்லை. தொடர்ந்து வெவ்வேறு திசைகளில் தூண்டில் போட்டுவிட்டுக் காத்திருந்தார்.

திடீரென்று யாரும் எதிர்பாராத நேரத்தில் அவர்களுக்கு ஒரு மீன் சிக்கியது. ஈராக்கைச் சேர்ந்த ஜோசஃப் என்ற யூதர் மொசாட்டைத் தொடர்புகொண்டார். உங்களுக்கு மிக் 21 வேண்டுமா? நான் ஏற்பாடு செய்கின்றேன் விலை ஒரு மில்லியன் டொலர் சரியா?

இப்படிச் சந்தையில் கத்தரிக்காய் வியாபாரம் போல் ஜோசஃப் பேச ஆரம்பிக்க மொசாட் திகைத்துப் போனது. யார் இந்த ஜோசஃப் மிக் 21 விமானத்தைக் கடத்துகின்ற அளவுக்கு ஈராக் இராணுவத்தில் அவருக்குச் செல்வாக்கு உண்டா? இந்த நபரை நம்பி ஒரு மில்லியன் டொலரை எப்படித் தூக்கிக் கொடுப்பது?

இஸ்ரேல் அரசாங்க இராணுவ வட்டாரங்களில் யாரும் ஜோசஃபை நம்பவில்லை. மொசாட் அதிகாரிகள் கூட அவர் ஒரு பெரிய ஏமாற்றுக்காரர் என்றுதான் நினைத்தார்கள். இந்த வம்பே வேண்டாம் ஒதுங்கி விடுங்கள் அதுதான் உங்களுக்கு நல்லது என்று மியர் அமித்தை எச்சரிக்கை செய்தார்கள்.

ஆனால் அப்போதைய நிலைமையில் மியர் அமித்துக்கு வேறு வழி தெரியவில்லை. இந்த ஒரு வாய்ப்பையும் தவறவிட்டால் அதன்பிறகு மிக்21 தன் கைக்குக் கிடைக்காமலே போய் விடுமோ என்று அவருக்கு கவலை அதற்காகக் கொஞ்சம் ரிஸ்க் எடுத்துப் பார்த் தால் தப்பில்லை என்று தீர்மானித்தார்.

உடனடியாக மொசாட் ஜோசஃபை அழைத்து நாங்கள் பணம் கொடுக்க ரெடி ஆனால் நீங்கள் யார்? எப்படி மிக்21ஐக் கடத்துவீர்கள்? அதெல்லாம் தெளிவாகச் சொல் லுங்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுநாயக்க...

திலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமர சிங்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டவருக்கான சாரதி அனுமதிப்பத்திரம் தொடர்பான பணிகளை வேரஹெரவில் உள்ள மோட்டார் வாகனப்போக்குவரத்து ஆணையாளர் அலுவலகத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்டாலும், சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக இன்று (நேற்று) முதல் கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்தில் புதிய கருமபீடம் ஊடாக இப்பணிகள் முன்னெடுக்கப் படவுள்ளன.

இருப்பினும் இப்புதிய கருமபீடம் ஊடாக வெளிநாட்டினருக்கு இலகு ரக வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் மட்டுமே வழங்கப்படும் என்றும் கனரக வாகனங்கள் அல்லது முச்சக்கர வண்டிகளுக்கான சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படாது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ந-7)

## PIN இலக்கம்...

கப்பட்ட தனிநபர் அடையாள இலக்கத்தின் (PIN) செல்லுபடியாகும் காலத்தை எதிர்வரும் நவம்பர் 30ஆம் திகதிவரை நீடிக்க உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ந-7)

## அரச உழியர்...

இம்மாத இறுதிக்குள் சமர்ப்பிக்கவில்லை எனில் அவர்களுக்கு எதிராகச்சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தாமதமாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் விபரங்களைச் சமர்ப்பிக்கும் அதிகாரிகளுக்கு சட்ட விதிகளுக்கு அமைவாக அபராதம் விதிக்கப்படும். எனவே அதற்கமைய இதுவரை சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய அறிக்கையைச் சமர்ப்பிக்காத அதிகாரிகள் யாராவது இருந்தால், அவர்கள் அந்த விபரங்களை விரைவில் தங்கள் திணைக்களத் தலைவர்களிடம் சமர்ப்பித்து, அவர்களுக்கு விதிக்கப்படக்கூடிய அபராதத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மேலும் ஜூன் 30ஆம் திகதிக்குப் பிறகு சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் அறிவிப்புகளை திணைக்களத் தலைவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவ்வாறு அவற்றை திணைக்களத் தலைவர்கள் ஏற்க மறுத்தால், இது தொடர்பாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு அறியத் தருமாறும் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## பஞ்சலோக...

கப்பட்டுள்ளதுடன் இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தமிழ்நாட்டின் தூத்துக்குடியில் இருந்து சிலை கடத்த திட்டமிடப்பட்டிருந்ததாக தமிழக குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரி ஒருவருக்கு கிடைத்த இரகசிய தகவலைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் (02) மாலை திருச்சூரில் உள்ள அண்ணா காலனியில் தேடுதல் நடவடிக்கை தொடங்கப்பட்டது.

இதன்போது சிலைக்கடத்தலுடன் சம்பந்தப்பட்ட இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் 52 மற்றும் 35 வயதுடையவர்கள் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட சிலையின் மதிப்பு மில்லியன் கணக்கில் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அந்தச் சிலை தங்கம், வெள்ளி, ஈயம் மற்றும் இரும்பு உள்ளிட்ட ஐந்து உலோகங்களால் ஆன ஒரு பழங்கால சிலை என்றும் சிலையை இ[illegible] சென்று பின்னர் ஒரு ஐரோப்பிய நாட்டிற்குக் கொண்டு செல்லத் திட்டமிடப்பட்டதாகவும் சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் வாயிலாகத் தெரியவந்துள்ளது. (ந-7)

## போதைவஸ்துப்...

களிடமிருந்து 90 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும், பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய போதைப்பொருள் தடுப்புப் பிரிவினால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இருவரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதோடு மேலும் விசாரணைகளின் பின்னர், அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## செம்...

சித்துப்பாத்தி மயான விஸ்தரிப்புப் பணிகளின் போது புதிய மனிதப் புதைகுழி இனங்காணப்பட்டது.

அதுடன் பேராசிரியர் ராஜ் சோமதேவவின் ஊகத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 2ஆவது மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது.

இப்புதைகுழிகளில் இரண்டு கட்டங்களாக அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருவதோடு இதுவரை 130 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் இனம் காணப்பட்டுள்ளன.

இந்நிலையில் குறித்த பிரதேசத்தில் மேலும் பல மனிதப் புதைகுழிகள் இருக்கக்கூடும் என்ற அச்சம் எழுந்துள்ள நிலையில் இது குறித்து யாழ். நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட நிலையில் ஸ்கான் பரிசோதனைக்கு மன்று அனுமதி வழங்கியது.

இதன் பிரகாரம் இன்று யாழ்ப்பாண நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் பேராசிரியர் ராஜ்சோமதேவ, சட்ட வைத்திய அதிகாரி பிரணவன் தலைமையிலான குழுவினர், காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்க சட்டத்தரணிகளின் பிரசன்னத்துடன் செம்மணிப் புதைகுழியை அண்டிய பகுதிகளில் குறித்த ஆய்வானது மேற்கொள்ளப் படவுள்ளது. (ந-7)

## செம்மணியில் நேற்...

தெடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வின் 2ஆம் கட்டத்தின் இரண்டாம் சுற்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜாவின் மேற்பார்வையின் கீழ் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் இதுவரை 130 மனித என்புத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 120 முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)
































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

மல்லாகம் சோடாக் கம்பனி வீதியில்
6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
பயன்தரு மரங்கள் உண்டு.
தரகர் தொடர்பு கொள்ள வேண்டாம். (4965)

**077 603 9929**
**+4479 5757 0070**

## தேவை

சட்டரிங் வேலைக்குத் தேவையான,
பாவித்த சட்டர் வோட் மா பலகை 4x3
அளவிலான மரங்கள் தேவை.
விற்க விரும்புவோர் தொடர்பு
கொள்ளவும். (4964)

**077 576 8321**

## விசேட சலுகைகள்

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

UK - 1320/= · Australia - 2220/=
France - 2080/= · Canada - 2570/=
Germany - 1920/= · மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

**திருமுருகன் கொம் நெற்**
321, K.K.S Road, Jaffna. 0777 554 528
கிளைகள் : கொழும்பு, வவுனியா,
மன்னார்,முல்லைத்தீவு, மல்லாவி (4966)

## கனடா - வரி இல்லாமல்

விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery (C-3566)

UK 11Kg - 1420/- · France 11Kg - 2220/- · Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- · Australia 11Kg - 2150/- · Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் Metro Branch, சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241 / 076 822 6237


## முன்னாள் ...

செய்வதற்கும் எதிராக ஐநூறுக்கும் மேற்பட்ட முன்னாள் எம்.பி.க்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஓய்வு பெற்ற எம்.பி.க்கள் சங்கம், ஜெனீவா விலுள்ள மனித உரிமைகள் ஆணை யத்திடம் ஒரு கடிதத்தை சமர்ப்பித் துள்ளது.

குறித்த கடிதத்தில் ஓய்வுபெற்ற எம்.பி.க்களில் பெரும்பாலானோர் நோய்வாய்ப்பட்டிருப்பதால், அவர்கள் வேலை செய்யவோ அல்லது தொழில் நடத்தவோ முடியாதுள்ளமையால் ஓய்வூதியத்தை நிறுத்தியமை பாரதூர மானது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை எம்.பிகளின் ஓய்வூதி யம் தொடர்புடைய சட்டங்களில் திருத் தம் செய்வதற்கும் இரண்டு புதிய வரைவு சட்ட மூலங்களை தயாரிப் பதற்கும் அமைச் சரவை சமீபத்தில் ஒப்புதல் அளித் துள்ள நிலையில், இதற்குப் பதிலளி த்த ஓய்வுபெற்ற எம்.பி.க்கள் சங் கம், முன்னாள் எம்.பி.க்களின் ஓய் வூதியம் இரத்துச் செய்யப்பட்டால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித் துள்ளது.

முன்னாள் எம்.பிக்கள் பலர் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது கூட கடினமாக இருக்கும் தற் போதைய சூழ் நிலையில் ஓய்வூ தியத்தை இரத்துச்செய்வது நியாயமற்றது என்று அச் சங்கம் மேலும் சுட்டிக் காட்டியுள்ளது.

(ந-7)


## மணப்பெண் தேவை

01.நல்லூர் - சுண்டிக்குளி, இந்து, 1996, ரேவதி, MBBS, Doctor மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 51633
02.இளவாலை, இந்து, 1991, கேட்டை, BSC, Civil Engineering மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 47511
03.அல்வாய், இந்து, 1990, ரோகிணி, Charted Accountant மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 42381
04.மானிப்பாய், இந்து, 1989, விசாகம், Software Engineer மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 40520
05.பருத்தித்துறை, இந்து, 1995, சதயம்,Charted Accountant மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 39676
06.கோண்டாவில் - மண்டைதீவு, இந்து, 1989, மூலம், MBBS, Doctor மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
07.மீசாலை - சாவகச்சேரி, இந்து, 1994, மிருகசீரிடம், MBBS, Doctor மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 33190
08.தெல்லிப்பளை - புத்தூர், இந்து, 1979, அவிட்டம், CIMA,Charted Accountant மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 32638
09.கோப்பாய், இந்து, 1982, சுவாதி, MBBS, Doctor, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 31058
10.தும்பளை, இந்து, 1992, பூசம், CIMA Qualified, Accountant மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 53204

எம்மிடம் எல்லா நாட்டிலும், எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு. (1410)

**S.Sharma J.P** www.thaalee.com | 077 539 3728


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி. காருண்யா சந்திரகுமார்
அவர்களின் அன்பு மாமியார்




### திருமதி நல்லம்மா தருமலிங்கம்

அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா
சாந்தியடையவும் இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவுத்துயருடன்
சேவையாளர் சங்கம், யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி. (1408)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 16 . 04 . 1948



மறைவு 03 . 08 . 2025


உடல் நலக் குறைவு காரணமாக நேற்று (03.08.2025)
ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் அடைந்த

### அமரர் இரத்தினம் கதிரவேலு

அவர்களின் ஆத்மா அமைதியடைய இறைவனைப்
பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும்
தெரிவித்துக்கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்:
நா. சங்கர் குடும்பம் (சுவிஸ்) (1409)

## மரண அறிவித்தல்



### விநாசித்தம்பி மயில்வாகனம் (சிறி)

### (ஓய்வுநிலை நிலஅளவைத் திணைக்கள உத்தியோகத்தர்)

செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகவும் உபயகதிர்காமம், புலோலியை வசிப் பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி மயில்வாகனம்(சிறி) அவர்கள் கடந்த (02.08.2025) சனிக்கிழமை அன்று எல்லாம் வல்லவனின் பாதக்கமலங்களைச் சரணடைந்தார்.

அன்னார் விநாசித்தம்பி - சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மகனும் பூபாலசிங்கம் - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும் தவமலர் அவர் களின் அன்புக் கணவரும் மலர்மதி, மதிவருணன் (லண்டன்), மலர்விழி, மதனராசா (மதன் ரவல்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வகுலசிங்கம், சந்தியா, கோபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் நடராசா (ஓய்வு நிலைகிராம அலுவலர்), கனகரத்தினம், சோமசுந்தரம் (ஓய்வுநிலைப்பயிற்றுநர் - இலங்கைப் போக்குவரத்துச் சபை), பவளநாதன் (முன்னைநாள் களஞ்சியக் காப்பாளர் - வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்), சிவசுப்பிரமணியம் (முன்னைநாள் முகாமையாளர் - வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்), விக்னேஸ்வரன் (ஓய்வுநிலை வருமானவரிப் பரிசோதகர்), அமரர் அன்பரசி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தவபுவனேஸ்வரி, தவபுனிதமலர், தவகுகானந்தம் (குணம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் மகிந்தன் (LB Finance,நெல்லியடி), மதுஷா, நிதுஷா, மகிஷா, மகிசன், பாவலன், கபிலன், அபிஷா ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2025) திங்கட்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கந்தமுருகேசனார் வீதி,
உபயகதிர்காமம், புலோலி தெற்கு. (C-3560)

தகவல் :
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org